padippakam




படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# புதிய சிந்தனைக் கட்டுரைகள்

01. நமக்குள் ஏன்
இந்தப் பிரச்சனைகள்.

02. கி. பி. 2000 ற்குப் பிற்பட்ட
ஐரோப்பிய ஒன்றியத்தில்
புலம்பெயர் தமிழர்கள்

கி.செ.துரை

படிப்பகம்

padippakam

## நூல் பற்றிய விபரங்கள்.


- நூலின் தலைப்பு : புதிய சிந்தனைக் கட்டுரைகள்.
- நூலாசிரியர் : கி. செ. துரை.
- பதிப்பாண்டு : முதல் பதிப்பு ஆகஸ்ட் 1998



- © உரிமை : ஆசிரியர்



- வெளியீடு : கி.செ. துரை
  Fruehøjvej 10.2th,
  7400 Herning,
  Denmark.
  T.Phone : 0045 97215425
- வடிவமைப்பு : Tamil Teknik . DK


படிப்பகம்

padippakam

# முன்னுரை

இரண்டேயிரண்டு கட்டுரைகள் மட்டுமே இச்சிறு நூலில் இடம்பெற்றுள்ளன. நமக்கு புலம்பெயர் வாழ்வு மிகவும் புதியது. ஏற்கெனவே நமது மூதாதையரால் வாழப்பட்டு, ஒவ்வொன்றாக் கற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் துணைசெய்ய அச்சமின்றி நடைபயிலும் அடித்தளம் கொண்டதல்ல இவ்வாழ்வு. இங்கு தோன்றும் சிக்கல்களை ஒவ்வொருவரும் சுயமாகவே எதிர்கொண்டு தத்தமது அறிவிற்கு எட்டியபடி அவற்றிலிருந்து விரைவாகவோ அல்லது தாமதமாகவோ தம்மைக் காப்பாற்றிக் கொள்வதைத்தவிர மாற்றுவழிகள் தெரியவில்லை. இந்நிலையில் நம்மிடையேயுள்ள பல குறைபாடுகளை இனங்கண்டு, முடிந்தவரை அவற்றிற்கான தீர்வுகளைத்தேட முயல்வதே இக்கட்டுரைகளின் நோக்கம்.

கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக புலம்பெயர் சூழலில் வாழ்ந்து, இயன்றளவு சமூகப்பணிகளில் ஈடுபட்டு, சுயமாகவும், மற்றவர்களின் மூலமாகவும் சேகரித்த தகவல்களின் அடிப்படையிலேயே இக்கட்டுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. வாசிக்கும்போது பல இடங்கள் உங்கள் அனுபவங்களுடன் பொருந்தி வருவதுபோலவும் இருக்கலாம். வாழ்க்கையையும், அதைச் சீர்செய்யும் வழிகளையும் தேடும் படைப்புக்களைப் படிக்கும்போது அவ்வித உணர்வு தோன்றுவதும் இயல்பானதே. புண்படுத்தாது வாழ்வைப் பண்படுத்துவதே இதன் நோக்கமாதலால் சகல விடயங்களும் பொதுமைப்படுத்தியே நோக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விடயத்தையும் ஆழ்ந்து சிந்திக்கவும், அடுத்த அடியை நம்பிக்கையுடன் எடுத்து வைக்கவும் இந்நூல் கடுகளவாவது உதவுமானால் அதுவே உழைப்பிற்கான பரிசு. இம்முயற்சிக்குப் பலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

**டென்மார்க்** **கி. செ. துரை**
**27.07.98**

படிப்பகம்

padippakam

தமிழீழ
மண்ணில்
நின்று
அறிவுப்பணியாற்றும்
ஆசிரியப் பெருந்தகைகளுக்கு.

படிப்பகம்

padippakam



## நமக்குள் ஏன் இந்தச் சிக்கல்கள் மாற்று வழிகள் உண்டா ?

ஆட்சி நடாத்துவது முதல் அன்றாட வாழ்வின் சகல சின்னஞ்சிறு நடவடிக்கைகளைக்கூட சட்டங்களாகவே எழுதிவைத்துள்ள ஒரேயொரு நாடு டென்மார்க் என்பது உலகறிந்த விடயம். சனநாயகத்தில் பழமைமிக்க பிரித்தானியா கூட எழுதப்பட்ட சட்டங்களாலும் , எழுதப்படாத வழமைகளாலுமே தனது நிர்வாகத்தை நடாத்தி வருகிறது. உலகப் புகழ்மிக்க பிரித்தானிய முறைமையே டென்மார்க் வாழ்க்கைக்கு பொருந்தி வரவில்லை. சட்டங்களற்ற வழமைகளால் இந்நாட்டு வாழ்வைச் சந்திக்க முடியாதெனபதே இதன் சுருக்கமான கருத்து. எனவேதான் டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடொன்றிற்குள் வாழ முற்பட்டுள்ள புலம்பெயர் தமிழர், டெனிஸ் மக்கள் கடந்த காலங்களில் தம்மிடையே தோன்றிய சிக்கல்களைத் தீர்க்க எவ்வெவ் வழிமுறைகளைக் கண்டார்கள் என்பதைச் சீர்தூக்குவதும், சில மாற்று வழிகளைத் தேடிச் செல்வதுமே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

**சிக்கல்களைத் தீர்க்க டெனிஸ் மக்கள் வழமைகளை விடுத்து, எழுதப்பட்ட சட்டங்களின் உதவியையே நாடினர்.**

புலம்பெயர் தமிழ் மக்கள் ஐரோப்பாவில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டி தற்போது தமது பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் தேடிச்செல்லத் தொடங்கியிருக்கிறார்கள். எப்பொழுதும் கடந்த காலத்திற்குள் பிரவேசித்தல் என்பது பின்னங்கால் ஓட்டம் போலவும் அமைவதுண்டு அதனால் பல இடங்களில் தடக்கி விழுந்து விடும் இயல்புடையதாய் உள்ளது. எனவேதான் கடந்த பத்தாண்டுகளில் சமூகரீதியாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு



படிப்பகம்

padippakam



முண்ணெடுப்புக்களையும்; அவற்றிடையே நிகழ்ந்துவிட்ட எண்ணற்ற வெடிப்புக்களையும் கூர்ந்து அவதானித்தால் இத்தகு பின்னோட்டத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஏன் இந்த உடைவுகள் ? கண்ணாடிச் சிதறல்கள்

**நீர்ச்சாடிக்குள் மண்ணைப் போட்டுக் குலுக்கினால்: அது முதலில் குழம்பி, பின்னர் தனது மூலக்கூறுகளைத் தேடியே படிந்துகொள்ளும். மண்ணில்கூட இது நடைபெறுகிறது.**

போல சமுதாயம் பல தளங்களிலும் துண்டுபட வேண்டிய அவசியம் என்ன ? இத்தகைய கேள்விகளை இனியும் தவிர்த்துச் செல்லல் பொருத்தமானதல்ல. மண்பரிசோதனைக்காக சாடிக்குள் மண்ணையும், நீரையும் இட்டுக் குலுக்கினால் அவை முதலில் அடிதலையாகக் கலங்கி, பின் அவற்றின் கனவளவிற்கேற்ப படிப்படியான அடுக்குகளாகப் பிரிந்து, படிந்து கிடப்பதையும்; படிவுகள் நிகழும்வரை ஒவ்வொரு துணிக்கையும் தமக்கே உரிய மூலக்கூறுகளை நோக்கி பின்னங்கால் ஓட்டம்போல நகர்வதையும் காணமுடியும். இத்தகைய மரபுகளைத் தேடும் பின்னங்கால் ஓட்டமென்பது மண்ணிற்கும் இயல்பான ஒன்றுதான். இதுபோலவே புலம்பெயர் வாழ்வும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக குழம்பி, தற்போது தனது தளங்களையும், அதற்கான பிரிவுகளையும் தேடி ஓடமுற்படுகிறதா? சிதைவுகளின் மேல் நின்றாயினும் நாம் உரத்துச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

நாளும்பொழுதும் மக்களிடையே உருவாகிவரும் பிரிவுகளும், சிக்கல்களும் எப்படிப்பட்ட தளங்களின் வழியே உருவெடுக்கின்றன என்பதையே இங்கு முக்கியமாக நோக்க வேண்டும். புலம் பெயர்ந்து வருவோரின் மூலாதாரமான



படிப்பகம்

padippakam



வாழ்வியல் அடிப்படையாக அமைவது அதுவரை அவர்கள் தாய் நாட்டில் வாழ்ந்திருந்த வாழ்வின் அனுபவங்களே. தாய்நாடு, அதன் அரசியல் பொருளாதாரப் பின்னணிகள், சமூகக் கட்டுமானங்கள், வரலாறு ஆகிய பல்வேறு விடயங்கள் ஒன்று சேர்ந்தே, ஏற்கெனவே வாழப்பட்ட அவர்களின் வாழ்க்கையானது தீர்மானிக்கப் பட்டிருந்தது. அத்தகைய பின்னணிக்குள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ வளைத்து, நெளித்து, சமரசங் கண்டு பொருத்தப் பட்டிருந்த வாழ்க்கையை, அதே வடிவத்தோடு ஐரோப்பிய வாழ்வியல் அச்சிலும் பொருத்துவதென்பது உண்மையில் மிகக் கடினமான காரியம். இங்கு வாழ்வியல் பின்னணி அடிதலையாக மாறியிருப்பதைப் புரிந்து, அதற்கு ஏற்புடைய மாற்றங்களை உருவாக்காமையே சிக்கல்கள் யாவற்றிற்குமே தாய்வீடாகி விடுகிறது. இதிலிருந்தே பல்வேறு வடிவங்களாக முரண்பாடுகள் ஒவ்வொன்றாகத் தலை தூக்குகின்றன. அவற்றின் அகோரமான தாக்குதலுக்கு பழையவர்கள் மட்டுமல்ல, புலம் பெயர் அடுத்த தலைமுறையினரும் உட்பட்டு தவிக்க நேரிடுகிறது.

**தாய் நாட்டில் நாம் வாழ்க்கை என்னும் ஓவியத்தை வரைந்த பின்னணித் திரைக்கும் : வெளி நாடுகுளில் வாழ்க்கையை வரைய வேண்டிய பின்னணித் திரைக்கும் பெரும் வேறுபாடுகளுண்டு.**

மேலும் இனி இங்கு செய்யக்கூடிய மாற்றங்கள் பற்றியும், சிக்கல்கள் பற்றியும் சிந்திக்கின்றபோது இன்னொரு அடிப்படை விடயத்தையும் மனதில் தீட்டிக்கொள்ளல் அவசியம். முதலாளித்துவ உளவியல், கம்யூனிச உளவியல், சோசலிச உளவியல் , அணிசேரா உளவியல் போன்ற சித்தாந்த உளவியல்களின் கருச்சிதைவே புலம்பெயர்



படிப்பகம்

padippakam



உளவியலாகும். இத்தகைய சித்தாந்தங்களின் அடிசறுக்கலினால் இன்று உலகில் 140 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக முகமிழந்து அலைகிறார்கள். இவ்விதம் வாழ்வு சிதைக்கப் பட்டோரின் மனோவியல் இப்பொழுது தனியாகவே ஆய்வு செய்யப்படுகிறது. இதுவே புலம்பெயர் உளவியலாகும். இது பல நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டதாகும். எனவேதான் உலகத்தை அதிகாரம் செலுத்தும் கோட்பாடுகளின் மேல் வசதியாக நின்றுகொண்டு, புலம்பெயர் வாழ்வின் துன்பியலை கேலியாக விமர்சித்தல் பொருந்தாத காரியமாகிறது. அதைத் தனியானதும், நேர்மையானது மாகிய ஒருவித பரிவுத் தன்மையோடு அணுகிச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் புலம் பெயர் வாழ்வில், " வெறுப்பு " என்பது ஓர் வெளிப்படாத நோயாக நிலைபெற்றுள்ளதை திறந்த மனதோடு அவதானித்தல் அவசியம். இது தமிழ் மக்களிடையே மட்டுமல்ல; சகல புலம்பெயர் சமூகங்களிடையேயும் காணப்படுகின்ற பொதுமைத் தன்மையாகும். தான் சம்பந்தப்படாத காரியங்களை வெறுத்துக் கூறும் போக்கு புலம்பெயர்ந்தோரிடையே பரவலாகக் காணப்படுகிறது. இது ஏன்? தான் வாழ்ந்த வாழ்வு, வகித்தபதவி, தனது சமூகஅந்தஸ்து, குடும்பம், பெருமை, உறவினர், ஊர், உடமைகளென யாவற்றையும் பறிகொடுத்திருக்கும் வெற்றிடமானது இழப்பின் சோகமாக மனங்களில் படிந்து கிடக்கிறது. அந்த இழப்புகள் தரும் கவலையே வெறுப்பாக மாறி மக்களை ஒதுங்கிப்போகச் செய்துவிடுகிறது. சகல துறைகளிலும் ஒருவர் மீது

> **முதலாளித்துவம், கம்யூனிசம் அணிசேராமை போன்ற சித்தாந்த உளவியல்களின் கருச்சிதைவே உலகெல்லாம் புலம்பெயர்ந்துள்ள 140 இலட்சம் மக்கள்.**



படிப்பகம்

padippakam



ஒருவருக்குண்டாகும் வெறுப்பு சமூகத்தை வேகமாகத் துண்டாடியும் செல்கிறது.

ஒருவர் தான் பிறந்த மண்ணில் கிடைத்ததாகக் கருதிக் கொள்ளும் தனக்குரிய சமூக மதிப்பீட்டை ஏற்கெனவே அறிந்திருக்க வாய்ப்பில்லாதிருக்கும் இன்னொரு தமிழருடன் சேர்ந்து; ஒரே குடியிருப்பில் , அயலவராக அல்லது ஒரு நகரத்தவராக, அல்லாவிடில் ஒரு நாட்டு எல்லைக்குட்பட்ட புலம்பெயர் தமிழராகவோ வாழ நேரிடுகிறது. இந்தப் புதிய உறவில் முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் இவர்களிடையே மறைந்துள்ள வெறுப்பு நோயானது திடீரென வெளிப்பட்டு, பாரதூரமான இடங்களையும் தொட்டுவிடுவதுண்டு. தாயகத்து வாழ்விலாயின் நிலமை வேறுபட்டது தொடர்ந்தும் அங்கேயே வாழவேண்டிய தேவை, ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் வாழ்வு, போன்ற இன்னோரன்ன காரணிகளால் வெறுப்படையும் போதுகூட, அவர்களிடையே நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் நிலவியது. ஆனால் புலம்பெயர் வாழ்விலோ அத்தகைய தேவை இருக்கவில்லை ஒதுங்குதல் , ஒதுக்குதல் அல்லது நகரத்தையே மாற்றுதல், முடியாவிட்டால் நாட்டையே மாற்றுதல் என்றளவிற்கு அவை கடூரம் பெற்றுச் செல்கின்றன.

> **தான் சம்பந்தப்படாத காரியங்களை முன்யோசனை இல்லாது வெறுப்பது ஓர் குறைபாடு**

உண்மையில் உயிர் குடிக்கும் போர்க் களங்களிலேயே, பாரதூரமான அஸ்திரங்களை இறுதியாகவே பிரயோகிப்பது மரபு. உதாரணமாக பாரதக் கதைகூட நாகாஸ்திரத்தை இறுதியாகவே; அதுவும் ஒரேயொரு தடவை மட்டுமே பிரயோகம் பண்ணும் விதியைக் கர்ணன் மூலமாக உலகத்திற்குச் சொல்ல முற்படுகிறது. இக் கதையில்



படிப்பகம்

padippakam



கர்ணனால் கையாளப்படும் நாகாஸ்திரம் போன்றதே நாக்கு என்னும் அஸ்திரமுமாகும். இதுவே புதிய உலகத்தின் மிகப் பயங்கரமான ஒடுக்குமுறைக் கருவியாகும். ஐரோப்பியத் தெருவில் ஒரு தமிழன், " கருப்புப் பன்றி " என்று ஓர் வெள்ளையனால் இம்சிக்கப்படும் போது அவன் அடையும் துயரில் அந்த ஒடுக்கு முறைமையின் கூர்மை, வாழ்வு கொண்டுள்ள தெனலாம். இப்படிப்பட்ட இனவாதச் செயல்கள் இன்னொரு ஹிட்லரையும், மூன்றாவது உலக யுத்தத்தையும் உருவாக்க வல்லவை. அவ்விதம் உருவாகும் பட்சத்தில் அதைத் தாங்கும் வல்லமை உலகிற்குக் கிடையாதென்பதை இருபெரும் உலக யுத்தங்களின் பின்னரும்கூட அறிய முடியாது போன, ஐரோப்பிய நிறவாதத்தைப் பற்றி இங்கு பேசாதுவிடினும்; இதே வகையான ஒடுக்கு முறைமைக்கு சற்றும் குறைவில்லாத நாகாஸ்திரம் போன்ற ஒடுக்கு முறைச்சொற்களை புலம்பெயர் தமிழ் மக்கள் தாமும் ஒருவர்மீது மற்றவர் பிரயோகித்து மகிழும் குரூரத்தை நினைவில் கொள்ளல் நலம். இத்தகைய சமூக அநியாயங்களும் புலம்பெயர் மக்களை நகரங்களை விட்டும்; பல சந்தர்ப்பங்களில் சமயங்களை விட்டும் துரத்திக் கொண்டிருக்கின்றன. எப்போதும் சமூகத்திற்கு வெளிப்புறத்தில் இருந்து வரும் ஒடுக்குமுறை சமூகத்தை ஒன்றிணைக்கும். அதே ஒடுக்கு முறைமையை சமூகம் தனக்குள் புதைத்து வைத்திருந்தால் அது வெடித்துச் சிதறி , சிதிலமடையும். இதற்கு இன்றைய புலம்பெயர் வாழ்வே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**நாகாஸ்திரம் போன்ற பயங்கரமான ஆயுதமே நாக்கு என்னும் அஸ்திரமாகும். இது புலம்பெயர் வாழ்வின் பயங்கரமான ஒடுக்குமுறைக் கருவியாகும்.**

எங்கும் எதிலும் போட்டி மனப்பான்மை, தனக்குத்



படிப்பகம்

padippakam



கிடைக்காத பால் நிலத்தில் கொட்டப்படலாம் ஆனால் மற்றவருக்குக் கிடைக்கக்கூடாது என்னும் காழ்ப்பு, எதிலும் அவசரம் , எந்தக் காரியமானாலும் முன்யோசனையின்றி ஆரம்பித்தல்; பினனர் பெரு நட்டங்களுடன் நிறுத்திக் கொள்ளல், தம்மிடையே உண்டாகும் முரண்பாடுகளை தமக்குள்ளேயே தீர்க்க வழியின்றி டெனிஸ் மக்களிடம் தவறாக எடுத்துரைத்து, முழுச்சமூகத்தையுமே சங்கடத்திற்கு உள்ளாக்குதல், நாட்டைவிட்டு வெளியேறுகிறோம் என்பதைத் தீர்மானித்ததும், வங்கிகளிலும், கடைகளிலும் கடன் வாங்கி மறைவது, இங்குள்ள வரிச் சட்டங்களை உரிய முறையில் விளங்கிப் பின்பற்ற முடியாமை, நேரத்தை வீணடித்தல் , வேலையிடத்தில் உடம்பை சமநிலையாகப் பயன்படுத்தாமையால் உண்டாகும் வருத்தங்கள், காலநிலைப் பாதிப்பு, உணவு வகைகள் ஒத்துவராமை, கலாச்சாரச் சிக்கல்கள், சாதி, சமய, ஊர், பிரதேசங்களை வைத்து முரண்பாடு கொள்ளல். இவைதவிர இளைஞர், வயோதிபர், பெண்கள், பிள்ளைகள், திருமணமின்றியிருக்கும் இளைஞர் , மனைவியையோ அல்லது கணவனையோ பிரிந்திருப்போர் என்று பல வழிகளில் சச்சரவுகள் உருவாகின்றன. எல்லாவற்றையுமே தனித்தனியாக எடுத்து வைத்து நோக்குவதைவிட, இவை அனைத்தும் தோற்றமெடுக்கும் பொதுவான சில அடிப்படைகளைத் தேடுவதே நலம்.

**அவசரபுத்தி, திட்டமின்மை, போட்டி மனப்பான்மை, தனக்குக் கிடைக்காத பால் நிலத்தில் கொட்ட வேண்டும் என்னும் எண்ணங்கள் என்றுதான் மாறும் ?**

இதில் முதலாவது புள்ளி, எழுதப்பட்ட



படிப்பகம்

padippakam



சட்டங்களாகும். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல இந்த நாட்டில் எந்த நடவடிக்கையை ஆரம்பிப்பதானாலும் எழுதப்பட்ட சட்டங்களே முதலாவது புள்ளியாக அமையும். ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உட்பட்ட நாடொன்றில் வாழ முற்பட்டிருக்கும் தமிழ் மக்கள் ஏற்கெனவே தமது தாய்நாட்டில் வாழ்வை நடாத்தத் துணையாயிருந்த சட்டங்கள் எவை என்னும் கேள்வியை முதலில் எழுப்ப வேண்டியது அவசியம். தமிழ் மக்கள் தமது வாழ்வை நடாத்த சட்டங்களைவிட பெருமளவு வழமைகளையே அடிப்படையாகக் கடைப் பிடித்தனர். இதற்கு உதாரணமாக 1707 ல் ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்ட யாழ்ப்பாணத் தேசவழமைச் சட்டங்களைக் கூறலாம். இத்தகைய வழமைச் சட்டங்களோடு பழமொழிகள், நீதிநூல்கள், தேவார திருவாசகங்கள், சமய நீதிகள் போன்றனவே அவர்களின் வாழ்க்கையை நடாத்தும் நெறிகளாக இருந்து வந்துள்ளன. ரோமன் டச்சுச் சட்டம், பிரித்தானிய நீதிமன்ற முறைமைகள், இலங்கையின் எண்ணற்ற மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புக்கள் யாவும், ஆங்கிலம் கற்ற சட்டத்தரணிகளின் பிடிக்குள்ளேயே சிக்கிக்கிடந்தன. இவற்றில் எதுவுமே மக்கள் வாழ்வை மேம்படுத்த உதவியவையல்ல. வாதத்திறனும், பணபலமுமே பல சந்தர்ப்பங்களில் நீதியை நிர்ணயிக்கக் கூடியனவாக இருந்தன. எனவேதான் தமிழ் மக்களின் வாழ்வு இலங்கையின் எழுதப்பட்ட சட்டங்களோடு என்றுமே ஐக்கியப் பட்டிருந்ததில்லை. மேலும் நீதிமன்றத்தின் படியேறுவதே தற்கொலைக்குரிய அவமானமெனக் கருதப்பட்ட அனுபவங்களும் நமது மக்களிடையே உண்டு. இத்தகைய பின்னணிகளுக்குள் வாழ்ந்த மக்கள் குழுவினர் முற்று

**தமிழ் மக்கள் சட்டங்களை அதிகம் பாவிக்காது வழமைகளால் தம்மை வளர்த்துக் கொண்ட சமூகம்.**



படிப்பகம்

padippakam



முழுதாகச் சட்டங்களைக் கொண்டே நிர்வாகம் நடக்கும் ஓர் ஐரோப்பிய நாட்டில் தமது பழைய வழமைகள் சார்ந்த வாழ்வை மனதில் வைத்து புலம்பெயர் சமுதாயமாக ஒன்றுபட முயலும்போது பல இடங்களில் தடுமாற்றமடைவது நியாயமானதே.

**சட்டங்களை அறிவதும் , மதித்து நடப்பதும், சமூக மேம்பாட்டிற்கு அவசியம்.**

இத்தகைய நெருக்கடிகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் ? மாற்றுவழிகள் ஏதாவது உண்டா? இதுவே நம்முன் எழுந்துநிற்கும் முக்கிய கேள்வியாகும். இதன் பொருட்டு பல வழிமுறைகளைத் தேடலாம். இதில் முதன்மையானது வாழ்வியல் சட்டங்களை உருவாக்குவதும், அதை விளங்குவதும் , மதித்து நடப்பதுமாகும். சட்டங்கள் என்றதும் அரசற்ற ஓர் இனத்திடையே சட்டங்களை எவ்வாறு அமுல் செய்யலாம் என்ற கேள்வியெழுகிறது. எனவேதான் நாம் நம்மிடையே உருவாக்கிக் கொள்ள வேண்டிய சட்டங்கள் ஒருபுறமிருக்க; இங்கு அமுலில் இருக்கும் சட்டங்களில் நமக்கு ஏற்புடையதைத் தமிழ்ப்படுத்தி நம்மிடையே பயன்படுத்திக் கொள்ளல் நலம். எப்போதும் சட்டங்கள் சரியாகப் பயன்படுத்தப்பட்டு, சமூகத்திற்கு நன்மை விளைவிக்க வேண்டுமானால் அவற்றை மதித்து நடக்க வேண்டியது அவசியமாகும். அதற்குரிய விளக்கத்தையும் நம்மிடையே கலந்துரையாடல்கள் மூலம் வளர்த்துச் செல்ல வேண்டியதும் முக்கியம். இதன் அவசியத்தை விளக்க சில உதாரணங்களை இங்கே தரமுடியும்.

நம்மிடையே தமிழ்க் கடைகளை நடாத்த முன்வந்தோரில் பலர் கடந்த காலங்களில் தமது வியாபாரத்தில் தாக்குப் பிடித்து நிற்க முடியாது போயிற்று.



படிப்பகம்

padippakam



இதற்குப் பிரதான காரணம் வியாபாரிகளிடையே நடைபெற்ற கடும் போட்டிகளும் , கட்டுப்படியாகாத விலை இறக்குதல்களுமாகும். இதனால் பலர் கடைகளை இழுத்து மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இத்தகைய போட்டி விலை இறக்குதல்களை மௌனமாகவே மக்களும் பயன்படுத்திக் கொண்டார்கள். உண்மையில் இத்தகைய போட்டிகள் புலம்பெயர் சூழலில் மிகத் தவறானவை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பை சமூகம் சரிவர உணர்ந்திருக்கவில்லை. மேலும் இங்கு எவரும் வியாபாரத்தை எந்நேரமும் ஆரம்பிக்கலாம் . அதற்குரிய கட்டுப்பாடற்ற திறந்த வெளிச் சந்தை முறையே முற்று முழுதாக நிலவுகிறதெனப் பலர் நினைப்பது தவறு. இங்குள்ள டெனிஸ் வியாபாரிகளாலும் தாம் நினைத்தபடி எல்லாப் பொருட்களையும் மனம்போல விற்பனை செய்ய முடியாது. சகல விற்பனைப் பொருட்களையும் முதலில் வகை தொகையாகப் பிரிப்பார்கள், பொருட்களுக்குரிய விசேட இலக்கங்களை இடுவார்கள், அதுபோலவே கடைகளையும் தரரீதியான தொகுதிகளாகப் பிரிப்பார்கள். ஒரு கடை எந்த விற்பனைப் பிரிவிற்குள் அடங்குகிறதோ அதற்கென ஒதுக்கப்பட்ட இலக்கங்களுடைய பொருட்களை மட்டுமே அவர்கள் விற்பனை செய்யலாம். இதுபோலவே மலிவு

> **இங்கு எந்தத் தொழிலையும் ஆரம்பித்து மனம்போனபடி நடத்தலாம் என்ற எண்ணம் மிகத் தவறானது.**

> *தன்னலத்தை முற்றிலும் விடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல ; ஆனால் தன்னலம் பிறர் நலத்திற்குக் கேடு செய்யாதபடி எல்லை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.*
>
> **பழமொழி**



படிப்பகம்

padippakam



விற்பனைக் காலத்திலும் மக்களைக் கவர்வதற்காக என்னென்ன பொருட்களை ; எவ்வெக் காலத்தில் விற்பனை செய்வது என்பதற்கும்கூட உடன்பாடு காணப்படுகிறது. இந்த ஏற்பாடானது மக்கள் சகல கடைகளையும் பாவிக்க வேண்டிய தேவையையும், அதேவேளை சகல கடைகளும் தொடர்ந்து இயங்கக்கூடிய பாதுகாப்பையும் சட்டரீதியாகவே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இத்தகைய ஏற்பாட்டை புலம்பெயர் மக்களின் தமிழ்க் கடைகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். புலம்பெயர் மக்களுக்கான வர்த்தகர் சங்கம் அமைக்கப்பட்டு, அவற்றிற்குரிய டெனிஸ் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, நம்மிடையே பயன்படுத்தப்படல் வேண்டும்.

இதுபோல நமது வாழ்வு பல இடங்களில் முரண்படுவதற்கு எதைச் செய்வது , எதைச் செய்யக்கூடாதென்பதற்கு சட்டரீதியான விளக்கங்களோ , வரையறைகளோ உருவாக்கப் பட்டிராமை ஒரு காரணமாகும். இந்த நிலையே எல்லா இடங்களிலும் குறுக்கீடுகள் நிகழ்ந்து, காரியங்கள் தேக்கமடையக் காரணமாகிவிடுகிறது. எனவே எல்லாவிதமான நிறுவன நடவடிக்கைகளுக்கும் யாப்புகள் அவசியம். ஒப்பனைக்காக யாப்புக்கள் எழுதப்பட்டாலும் அவை எல்லோராலும் வாசிக்கப்படுவதோ , அதனடிப்படையில் பேசப்படுவதோ வழமையில் இல்லை. பொதுச் சங்கங்கள் , விளையாட்டுக் கழகங்களிடையே கலந்துரையாடல்கள் நடைபெறும்போது யாப்பை மீறிச்செல்வதும் ; யாப்புக்கு வெளியேயான

**சிக்கல்களைத் தவிர்க்க யாப்புக்கள் அவசியம். அவற்றை மக்கள் புரிந்து கடைப்பிடிக்கும் வரை யாப்பியல் வழிகாட்டிகளை நியமித்துக் கொள்வது டெனிஸ் மக்களிடையே உள்ள வழமை.**



படிப்பகம்

padippakam



காரணங்களால் குழப்பங்கள் நேர்வதும் வழமையான அனுபவங்களாக உள்ளன. டெனிஸ் மக்களிடையேயும் இத்தகைய நிலமைகள், சிறப்பாக இளைஞர்களின் தாபனங்களில் காணப்படுவதுண்டு. இதற்காகவே நகரசபையால் பல யாப்பியல் அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இவர்கள் கூட்டங்கள் நடைபெறும்போது சமூகமளித்து, யாப்பிற்குள் பேசுவது எப்படியென வழிகாட்டுகிறார்கள். அதன்மூலம் ஒருவரை ஒருவர் மதித்து பண்பு தவறாது பேசமுடிகிறது. பொது வேலைகளுக்காக ஒன்றுபட்டு, அதைவிட வேகமாகப் பிரிந்து சென்று, ஆரம்பித்த விடயங்களுக்கு மூடுவிழா நடாத்துவதைத் தவிர்த்துக் கொள்வது எப்படியெனவும் இங்குள்ள யாப்பியல் வழிகாட்டிகள் எடுத்துரைக்கிறார்கள். இதை நாமும் கவனத்தில் கொண்டால்; பிரிந்து கிடக்கும் மக்கள் மட்டுமல்ல சங்கங்கள் கூட சில இடங்களில் ஒன்றுபட்டுச் செயற்பட முடியும்.

அடுத்து டெனிஸ் தொடர்புச் சாதனங்களில் தமிழ் மக்களுக்குச் சாதகமான பார்வையானது அடியோடு தகர்ந்துபோயுள்ளது. இவற்றில் வரும் செய்திகள் தமிழ் மக்களுக்கெதிரான உணர்வலைகளை மெல்ல மெல்ல உருவாக்கி வருகின்றன. இத்தகைய தொடர்புச் சாதனங்களிடையே நாம் ஏன் நமக்குரிய நீதியான அபிப்பிராயத்தை உருவாக்கத் தவறியிருக்கிறோம் ? இது முக்கியமான கேள்வியாகும். பரபரப்புச் செய்திகளுக்கான தட்டுப்பாடு, உள்ளீட்டுரீதியான போட்டி நிலமைகளில் செயற்படல் ஆகிய பின்னணிகளில் தொடர்புசாதனங்களை சீர்தூக்காதுவிடினும்; செய்திகளின் கோரப் பற்களுக்கிடையே தமிழ் மக்கள் தொடர்ந்தும் இரையாவதற்குரிய காரணங்களைத் தேடாதிருத்தல் முடியாது. ஒருவர் இந்த நாட்டிற்குள் பிரவேசித்தவுடன் அவர் கொடுக்கும் வாக்குமூலங்கள், அத்தோடு தனது இனம்பற்றி அவர் கொண்டுள்ள தாழ்வான தனிப்பட்ட கருத்துக்களில் இருந்தும்



படிப்பகம்

padippakam



இத்தகைய எதிர்நிலைகள் ஊற்றெடுத்து வருகின்றன. மற்ற இனங்களோடு ஒப்பிடுகையில் தமிழ் மக்களுக்கு தம் இனம்பற்றி நியாயமான மதிப்பீடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்களின் காரியங்களையெல்லாம் தமிழர்களே ஒட்டுமொத்தமாகக் குறைகூறுவதை எங்கும், எதிலும் காணமுடிகிறது. "தமிழ்ச் சாதி திருந்தாது ! " என்று கூறித்திரியாத தமிழர்களை எங்காவது தேடிப்பிடிக்க முடியுமா என்பது சந்தேகமே. இத்தகைய தாழ்மைப் போக்குக்கான காரணங்கள் தமிழர்களின் வரலாற்றோடு தொடர்புபட்டு நிற்கின்றன.

**ஒவ்வொரு தமிழருக்கும் தனது நாட்டின் தூதுவர் போல வாழவேண்டிய பொறுப்பிருக்கிறது.**

இருந்தாலும் இத்தகைய எதிர்நிலைப் போக்குகள் எதிர்காலத்திற்கு நலன்தருமா என்பதை அவதானித்து நடப்பது முக்கியமானது. நம்மைப்பற்றிய நமது தாழ்வுபட்ட கருத்துக்கள், தமிழர் சமூகம்பற்றிய தவறான அபிப்பிராயத்தை தொடர்ந்தும் உருவாக்கிச் செல்கிறது. முதலில் நாம் நம்மை மதித்தல் அவசியம். அதுபோல நமது அயலவர்களை மதித்தல் அவசியம். நமது இனம் எனவரும்போது ஒன்றுக்குப் பலதடவைகள் யோசித்துப் பேசுவது அவசியம். ஒவ்வொரு தமிழரும் வெளிநாடுகளில் தமது தாய்நாட்டின் தூதுவருக்குரிய பொறுப்புடன் நடக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் இங்கு ஒரு தமிழரின் தவறு முழுத் தமிழினத்தையுமே பாதிப்பதிலிருந்தே நமக்குள்ள கடமைகளின் பொறுப்பையும்; கடமையையும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். எமக்குள்ள பொறுப்புணர்வே தொடர்பு சாதனங்களில் எமக்கு சாதகமான கருத்தை உருவாக்க உதவும் என்பதை மறந்துவிடலாகாது.

ஒரு தமிழருக்கு எங்காவது ஓர் சலுகை மேலதிகமாகக்



படிப்பகம்

padippakam



கிடைத்துவிட்ட செய்தி இன்னொரு தமிழரின் காதுகளில் விழுந்துவிட்டால் போதும். அது ஏன் வழங்கப்பட்டது, என்ன சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்டது, அதற்குரிய காரணங்கள் யாவை என்று ஆராயமுன்னரே தனக்கும் ஏன் அத்தகைய சலுகைகள் வழங்கப் படவில்லையெனப் போர்க்கொடி தூக்கிச் செல்வதை சாதாரணமாக இங்கு எவருமே கண்டுகொள்ள முடியும். சலுகைகளில் சம உரிமை கோருவதுபோல சாதாரண சமூக வாழ்விலும் அதே சம உரிமையைக் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. இந்த இரண்டு காரியங்களும் எதிர் எதிர்த் திசைகளில் ஓடும் குதிரைகள். ஆனால் இந்த இரண்டு குதிரைகளையும் பூட்டி புலம்பெயர் வாழ்க்கை வண்டியை ஓட்டுவதே சகல முரண்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்து விடுவதை நாம் கோபமின்றிச் சீர்தூக்கிப் பார்த்தல் அவசியம்.

**சலுகைகளில் சம உரிமை கேட்கிறோம். ஆனால் நடைமுறை வாழ்விலோ அதுபற்றி நினைப்பதில்லை.**

மேலும் இத்தோடு ஓர் உபவிடயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சகலருக்கும் சமவாய்ப்புக்களை வழங்கியுள்ள டென்மார்க் சூழலில், " நாம் என்ன வகையில் குறைந்துவிட்டோம் ? எம்மை ஏன் பயன்படுத்தவில்லை?" என்ற கோபம், பயன்படுத்தப் படாதவரிடையே நிறைந்திருப்பது தெரிகிறது. இது இங்குள்ள பொருளியல்சார் வாழ்வின் பின்னணியில் டெனிஸ் மக்களிடையேயும் நிலவிவரும் பொதுவான கோபமாகும். இத்தகைய தாக்கம் புலம்பெயர்ந்தவர்களையும் விட்டுவைக்கவில்லை. எனவேதான், என்னை ஏன் பயன்படுத்தவில்லை? என்ற கேள்வியை நிறையப்பேர் மௌனமாகவே கேட்கிறார்கள். அதற்குரிய பதிலை பங்குபற்றாமை, அக்கறையீனம்,



படிப்பகம்

padippakam



ஒதுங்கிச்செல்லல், ஒருவருடன் மற்றவர் திடீரெனப் பேசாதுவிடல் போன்ற காரியங்களால் வெளிப் படுத்துகிறார்கள். வேறுசிலரோ தமது எதிர்ப்பைக் காட்ட எதையாவது செய்துவிட வேண்டுமென முயன்று, முழுச் சமூக வாழ்வுக்குமே எதிரான திசையில் பயணம் செய்துவிடுவதுமுண்டு. எனவேதான் செயலூக்கம் மிக்க பங்குபற்றும் நிலைக்கு மக்களைக் கொண்டு வரும் சந்தர்ப்பங்களை திட்டமிட்டு வழங்குவதே இதற்குரிய தீர்வாகும். மேலும் சமூக நல்வாழ்வுப் பணிகளில் குறைந்தளவு மக்களே பெருமளவு பாரங்களைச் சுமக்க, பெருந்தொகை மக்களிடம் சிறிதளவு பாரமே இருப்பதால் பல பணிகள் நிறைவேற்றப்படாமல், அல்லது ஆமை வேகத்திலேயே நகரவும் காண்கிறோம். எறும்புகள்போல சகல பணிகளிலும் திட்டமும்; எல்லோரும் முன்வந்து பாரங்களைப் பகிர்ந்து சுமக்கும் நிலையும் வந்தால் இத்தகைய குறைபாட்டை சீர்செய்து, சமூகவாழ்வை மேம்படுத்தலாம்.

> **பங்குபற்றாமை, ஒதுங்கி வாழ்தல், அலட்சியப் போக்குகள் யாவுமே அதிருப்தியின் மறுபக்க வெளிப்பாடுகளே.**

டென்மார்க்கில் தமிழ் மக்கள் மிகமிக இளைய சமூகத்தினர். சுமார் 12 வருட வரலாற்றை மட்டுமே கொண்டிருப்பவர்கள். எனவேதான் இங்கு முதன்முதலாக என்ன காரியம் செய்யப்படுகிறதோ அதுவே மற்றவர்களாலும் பின்பற்றப்பட்டு; இங்குள்ள தமிழர்களின் வழமைகளாகவும் மாறிவிடுகின்றன. திருமணங்கள், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாட்களென சகல நடவடிக்கைகளிலுமே இதுவரை எண்ணற்ற தவறுகள் நம்மையறியாமலே; அல்லது நம்மால் தவிர்க்க முடியாமலே உட்புகுந்துவிட்டன. உணவுப் பொருட்கள் பெருந்தொகையாக சமைத்து வீணடிக்கப்படுவது,



படிப்பகம்

padippakam



வீடியோ கலாச்சாரம், சில நாடுகளில் திருமணத்தின்போது சம்பெயின் உடைக்கப்படுவது, திட்டமிட்ட ஒழுங்குகளற்ற செயற்பாட்டால் வந்திருக்கும் அனைவரினதும் நேரங்கள் ஒட்டு மொத்தமாகவே பாழடிக்கப்படுகிறதே! என்பதை அறியாதிருத்தல்; பரிசுகளைக் கொடுப்பதற்கு நீண்ட கியூவரிசையில் காத்திருத்தல்; ஒருசில நாடுகளில் மதுவருந்தி நடனமிடுதல்; என்றவாறு கலாச்சாரச் சீரழிவுகள் வேகமாகப் பெருகிச் செல்லுகின்றன. இவற்றைச் சரிவர வரையறை செய்தல் அவசியம். அல்லாவிட்டால் எதிர் காலத்தில் கட்டிக்காத்து வைக்கப் படப்போவது கலாச்சாரம் என்ற பெயர் கொண்ட வெறும் சீரழிவுகளே என்ற உண்மையை எல்லோரும் கசப்புடன் எதிர்கொள்ள நேரிடலாம்.

> **ஒவ்வொரு பிறந்தநாளிலும் பிறந்த மண்ணுக்காக வேண்டி சிறுதொகையை சேர்த்துவருதை வழக்கமாக்க வேண்டும்.**

இங்கு விழாக்களை சரிவர ஒழுங்குபடுத்திக் கொள்ள அதற்கென சில வரையறைகளை எழுதிக் கொள்ள வேண்டியிருக்கிறது. சீரான முறையில் தமிழிலேயே அவை எழுதப்பட்டிருந்தால் இத்தகைய குழப்பங்களை என்றோ தவிர்த்திருக்கலாம். நமக்கு விழாக்கள் எவ்வளவு முக்கியமோ அதுபோல அதன்மூலம் பயன்பாடு கிடைப்பதும் முக்கியம். விரும்பினால் விழாக்களில் சேரும் பணத்தில் இத்தனை வீதத்தை தாய்நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவது என்று வரையறை செய்து கொள்வது நன்று. பிறந்த நாட்களை நடாத்துவது இங்கு சாதாரண வழமை. டெனிஸ் மக்களும் அதில் பெரும் அக்கறை காட்டுகிறார்கள். எனினும் பிறந்த நாளைக் கொண்டாடும்போது ஒவ்வொரு பிறந்த நாளிலும் ஒவ்வொருவரும் குறைந்தது நூறு குறோணரையாவது சேர்த்து



படிப்பகம்

padippakam



வைக்கலாம். இதை," நமது பிறந்த மண்ணுக்காக " என்ற உணர்வோடு சேர்த்து வருதல் வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் புலம்பெயர் மக்கள் அனைவரும் இதை ஓர் கடமையாக நடாத்தி வந்திருந்தால் நம்மால் உருவாக்கியிருக்கக் கூடிய நிதியின் அளவை நினைத்தால் மிஞ்சுவது வருத்தமே. இதை இதுவரை செய்யவில்லை. இனிமேல் செய்தென்ன என்றிராது இனியாவது செய்ய முயல்வது நல்லதல்லவா ? இவ்வித செயற்பாடுகளால் நமது விழாக்கள், கொண்டாட்டங்களைக் கூட ஏதோவொரு வகையில் அர்த்தப் படுத்த முடியலாம்.

**தமிழ்ச் சினிமாப் படங்களை தரம்பிரித்து வழங்கும் ஏற்பாடுகள் மிக அவசியம்.**

மேலும் குழந்தைகளதும்; இளைஞர்களதும் சீரழிவிற்கு இந்தியச் சினிமாக்களும் மிகப்பெரிய பங்காற்றி வருகின்றன. இந்தியாவின் குடிமகன் ஒருவர் வாரந்தம் பார்க்கும் சினிமாக்களுடன் ஒப்பிட்டால்; இந்திய மக்களைவிட புலம்பெயர் மக்கள் பார்க்கும் சினிமாக்களின் அளவு மிகக்கூடியதென்பது தெரியவரும். 1988ம் ஆண்டுக் கணக்கின்படி தமிழகத்தில் உள்ள மொத்த திரையரங்குகளின் எண்ணிக்கை 2323. இந்தியாவில் தினசரி ஒரு ரூபாய்க்கு குறைந்த வருமானமுள்ள மக்கள் தொகை 40கோடி எனக் கூறப்படுகிறது. எனவே வீடியோ மூலம் படம் பார்ப்போர் எண்ணிக்கை சனத்தொகையோடு ஒப்பிடும்போது அதிகமானதல்ல; ஆனால் புலம்பெயர் தமிழ் மக்களிடையே சகலவீடுகளிலும் தொலைக்காட்சிகள் உண்டு. இவைகளில் பெரும்பான்மை மினித்திரையரங்குகளாகவே வீடுகளில் இயங்குகின்றன. கோடம்பாக்கத்தில் சினிமாவிற்கு பூசை போடும்போது ஏரியாக்கள் விற்பனையாவது வழமை. தற்போது புலம்பெயர் நாடுகளும் கோடம்பாக்கம் சினிமாவின்



படிப்பகம்

padippakam



பிரதான விற்பனை ஏரியாவாக மாறிவிட்டமை கண்கூடான உண்மையாகிவிட்டது. சினிமா, சினிமாக் கலைஞர்கள் எனத் தொடங்கி சினிமா சார்ந்த விடயங்களுக்காகவே பல இலட்சங்களை வீணாக்குகிறார்கள். ஒவ்வொருவரும் தமது வீடுகளில் இருக்கும் சீ.டீக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் சினிமாமீதான முதலீட்டின் அளவைப் புரிந்து கொள்ள முடியும். இதுகுறித்து தனிப்பட்ட எவருமே கோபம் கொள்ளல் முடியாது. இது முழுச்சமூகத்தினதும் செயற்பாடாகவே இருக்கிறது. இன்றிருக்கும் நிலையில் பார்த்தால் சினிமா மோகத்தை முற்றாகவே தவிர்த்தல் முடியாதுபோலும். ஆனாலும் சினிமாப் படங்களை தரம்பிரித்து வைக்கலாம்.

**சினிமா பிரச்சனைக்குரியதா இல்லையா என்பது நாம் அதை எந்த இடத்தில் வைத்துப் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்ததாகும்.**

சமூகச்சீரழிவிற்குரிய படங்களை பாவனைப் படுத்தாதுவிடும் புதிய ஒழுங்குமுறையை விடயமறிந் தவர்கள் கூடிப்பேசி உருவாக்குதல் அவசியம். சமூகம் உசார் நிலையிலும்; விழிப்புணர்வுடனும் இருந்தால் இதில் ஏற்ற திருத்தம் செய்வது கடினமான பணியல்ல. மேலும் சினிமாவென்பது பிரச்சனையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அதை நாம் எப்படிப்பார்க்க முனைகிறோம் என்பதைப் பொறுத்ததாகும். இது குறித்த வழிகாட்டல்கள் நம்மிடையே வளர்க்கப்படவில்லை. உதாரணமாக கார்டூன் சினிமாக்களைப் பார்க்கும் சிறுவர்களோ இளைஞர்களோ தமது வாழ்க்கையை அவற்றுடன் நிஜமாகவே தொடர்புபடுத்துவதில்லை. அதுபோல வாழ்க்கைக்கு பொருந்தாத சினிமாக்களையும் தூரமான புள்ளியில் வைத்துப் பார்ப்பதன்மூலம் அவற்றை வாழ்க்கைக்குள் புகுத்தி மயக்கமடையும் நிலையிலிருந்து விடுபட முயற்சிக்கலாம்.



படிப்பகம்

padippakam



தாயகத்தில் நிலவும் அவலங்களால் தொடர்ந்தும் எண்ணற்ற மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் பயண முகவர்கள் மூலம் வெளிநாடு வருகிறார்கள். எனினும் இத்தகைய பயண முகவர்களின் வழிமுறைகளால் சர்வதேச சட்டங்களுக்கு முற்றிலும் பொருந்தாத காரியங்கள் பல நடந்துள்ளதை தொடர்பு சாதனங்களின் வழியே அனைவரும் அறிவர். அண்மையில் கிரேக்கக் கடலில் நடைபெற்ற சம்பவத்தை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். அகதி அந்தஸ்து என்பது ஐ.நா. சபையின் வரையறுக்கப்பட்ட சட்ட ரீதியான உடன்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நடைபெற்று வருகின்றது. எனவே அதே அகதிநிலையை சர்வதேச சட்டங்களைக் சீர்குலைப்பதன் மூலம் பெற்றுவிட முடியாது. இந்த அடிப்படைத் தகவல்கூட ஏனோ இவர்களுக்கு வழங்கப் பட்டிருப்பதில்லை. அகதி அந்தஸ்து இங்கு ஏன் வழங்கப்படுகிறது என்பதற்குரிய பூரண விளக்கங்கள், அகதி அந்தஸ்து கோரும்போது வீணான கற்பனைக் கதைகளைச் சோடிக்காது உண்மைகளை உரைக்கவேண்டிய அவசியம், யாவற்றையும் இவர்களிடம் உரிய முறையில் தெரிவித்திருக்க வேண்டியது யாருடைய பொறுப்பு ? அவர்கள் அனைவரும் உயிர்வாழ ஓடிவந்த நம்முடைய உடன் பிறப்புக்களல்லவா? அவர்களுக்கு உண்மை நிலைகளை ஒழுங்காக உரைத்திருக்க வேண்டியது அவர்களது உறவினரான புலம்பெயர் மக்களினது பிரதான கடமையல்லவா? என்று யோசிக்காமையால் அவலங்கள் மேலும்மேலும் தொடர்கின்றன இதைத் தடுப்பது எப்படி ?

> **சர்வதேச சட்டங்களுக்கு அமையவே அகதி அந்தஸ்து வழங்கப்படுகிறது. சர்வதேச ஒழுங்கமைப்பிற்கு முரணாக அதைப் பெறமுடியாது.**



படிப்பகம்

padippakam



மேற்கண்ட கேள்வியை மற்றவரை நோக்கி கேட்க வேண்டிய அவசியமில்லை. நம்மைப் பார்த்து நாமே எழுப்பிக்கொள்ள வேண்டும். கேட்டுக்கொண்டால் ஒருவரை தவறான வழியில் இன்னொரு நாட்டிற்குள் அகதியாக அழைக்கப் பாடுபடுவதா ? அல்லது இனியும் ஒருவர் அகதியாக உருவாகாது தடுக்கும் பணிக்குப் பாடுபடுவதா? என்ற கேள்விக்குப் பதில் கூறவேண்டிவரும். இதுவரை புலம் பெயர்ந்தோர் வாழ்வு ஆரோக்கியமான பக்கங்களைக் கொண்டிருந்ததா ? இனிப்புதிதாக வருவோருக்கு அது முன்போல ஆதரவு தரக்கூடிய நிலையில் இருக்கிறதா ? என்பதுபற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எமது உழைப்பையெல்லாம் ஒன்றுதிரட்டி, இன்னொருவரை வரவழைக்கவும்; பின் அவரை முகாம்களில் நீண்டகாலம் காக்கவைக்கவும்; கடலிலும், பனிச்சேற்றிலும் மூழ்கடிக்கவும் பயன்படுத்திவிட்டோமே என்ற அழுகுரல்கள் மறைய வேண்டுமானால் உண்மையில் தாயகத்தில் ஓர் நிலையான அமைதி ஏற்பட உறுதியாகவும், தெளிவாகவும், திறந்த மனதுடனுமே பாடுபட வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் வெளிநாட்டவர் நம்மீது கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள முயல்வார்கள் தாய்நிலமும் நம்மை மதிக்கும். இனி வெளிநாடுகள் மத்தியஸ்தம் வகிக்க முயல்வது அகதிகள் தொல்லைகளால் அல்ல புலம்பெயர் மக்களின் தளராத தூண்டுதலாலும், நேர்மையான அணுகுமுறையாலும் என்ற நிலை உருவாக வேண்டும். உண்மையில் அகதிகள் பிரச்சனையைக் குறைப்பதென்பதும், இலங்கையில் நிலவும் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதென்பதும் இருவேறு

> **அகதிகள் பிரச்சனையைக் குறைப்பதென்பதும், இலங்கைப் பிரச்சனையைத் தீர்ப்பதென்பதும் இருவேறு பணிகளல்ல.**



படிப்பகம்

padippakam



பணிகளல்ல. இரண்டுமே ஒன்றுதான் என்ற தெளிவை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்படுத்தி வைத்தல் வேண்டும். அதை நோக்கி திட்டங்களை வரைந்தால் ஐரோப்பிய ஒன்றியத்துடன் நாம் நிட்சயமாகக் கைகோர்க்க முடியும். அவையே நாட்டில் நியாயமான தீர்வு கிட்டவும்; ஐரோப்பிய ஒன்றியத்தை நமது பக்கம் திருப்பவும் உகந்த காரியங்களெனலாம்.

**கருத்தைக் கூறுவது எழுதுவதைவிட கடைப்பிடிப்பதே உயர்வான பணி.**

இங்கு எடுத்துரைக்கப்படும் பிரச்சனைகளும், தீர்வுகளும் நூற்றுக்கு நூறு சரியானவை என்று இக்கட்டுரை வாதிடவரவில்லை. மேலும் புத்திமதிகூறவும் வரவில்லை. அனைத்தும் அனுபவங்களின் தொகுப்புக்களே. எதைக் கேட்டாலும்; பார்த்தாலும் முதலில் காரணகாரியமின்றி எதிர்ப்பைத் தெரிவித்துவிட வேண்டும் எனவரும் உணர்வுகளைத் தவிர்த்து, இதைப் பல்வேறு கோணங்களில் வாசிப்பதும்; கருத்துக்களைச் செழுமைப் படுத்த வேண்டியதும்; செயற்படுத்த வழிகாண்பதும் அனைவருக்கும் உரிய கடமையே. எப்போதும் சமூகம் சிறக்க கூட்டு வேலைத் திட்டங்கள் அவசியம். எதையுமே குழுவாத மனப்பான்மையுடன் விரும்பி ஏற்பதோ, கண்மூடித்தனமாக பாராட்டுவதோ, அல்லது தூற்றி நிராகரிப்பதோ தவிர்க்கப் படவேண்டியவை. மேலும் இத்தகைய காரியங்களை யார் செய்வது, இவர்கள் யார் நமக்குச் சொல்ல, என்னும் கேள்விகளும் நம்மிடையே உள்ளன. எப்பொழுதும் கருத்துக்களை சொல்பவர் பெரியவர் என்ற எண்ணப் பாங்கானது இங்கு ஏற்புடையதல்ல; எப்போதும் கருத்துக்களைச் சொல்வதைவிட, அதை அறிந்து, நன்மை தீமைகளைச் விளங்கிச் செய்து முடிப்பதே உயர்ந்தபணி! என்ற உண்மையை இக்கட்டுரை தெளிவாகவே



படிப்பகம்

padippakam



ஒப்புக்கொள்கிறது. எப்பொருள் யார் வாய்க்கேட்பினும்; அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற வள்ளுவர் வாக்கை நினைந்தால் நம்மிடையேஉள்ள சீர்தூக்க மறுக்கும் குறைபாடுகள் அகலும்.

**யாராவது தவறுகளைச் சுட்டிக்காட்டினால் , அதுசரியானதா ? என்பதை ஆராயமுன்னரே கூறியவர்மீது பிழைகளைத்தேட ஆரம்பிக்கிறோம்.**

இதுமட்டுமல்ல எதைச் செய்வதானாலும் அதற்குத் தயார் நிலைப்பட்ட சமூகம் அவசியம். எனவே சமூகத்தை மேம்படுத்த முதலில் நல்ல நூல்களை வாசித்தும், கேட்டும், கடைப்பிடித்தும், நம்மைநாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். சிறிய சிறிய வாசகர் வட்டங்களை நகரங்கள் தோறும் உருவாக்குதல் அவசியம். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தவறுகளை நாகரிகமாகச் சுட்டிக்காட்டுதல், அப்படிச் சுட்டிக்காட்டினால் அவ்விதம் சுட்டிக் காட்டப்பட்ட காரணங்கள் சரியானவையா என ஆராய்வதை விடுத்து, சுட்டிக்காட்டியவரை வெறுக்கும் போக்கைத் தவிர்த்தல், சகோதர உணர்வை வளர்த்தல் , மற்றவரின் துயரங்களைக் கேட்டு மனதினுள் மகிழ்வடையாமை, பிழையான சிந்தனையென்று அறிந்தும் முகத்திற்காக அஞ்சி நல்லதெனப் போற்றுதல்; விடயங்களை அறியாமல் மற்றவர்களின் விமர்சனங்களை கேட்டு அவையே நமது விமர்சனங்களாக ஏற்றுப் பேசுவது போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் அவசியம். இவ்விதமாக மாற்றத்திற்குரிய பணிகள் பல நம்முன் காத்துக் கிடக்கின்றன. செயற்படாது தூங்கிக்கிடப்பதே பெரும் தேக்கநிலையை உருவாக்கி வைத்திருக்கிறது. இதை அகற்றப்பாடுபடுவது இளைஞர்களின் பணி. நமது எதிர்காலம் இருளானதென்று அலுத்துப்போன பழமைக்குரல்களே எங்கும் கேட்கிறது. இதனால் நமக்குரிய விடிவை நாம் நமக்கு முற்றிலும்



படிப்பகம்

padippakam



தொடர்பில்லாத புள்ளிகளில் தேடிச்செல்லும் அவலங்களும் அதிகரித்துச் செல்கிறது. சூரியனை மறுபடியும் சந்திக்க வேண்டுமென்றால் பாதிநாளை இரவில் கழிக்க வேண்டியிருக்கிறது இருப்பினும் முன்நோக்கிச் சுற்றும் பூமியே ஒளியைச் சந்திக்கிறது. அதுபோல சாதிப்பதற்கும், அவலங்களை அழித்து மீள்வதற்கும், ஏமாற்றங்களை நீக்கி நம்பிக்கை பெறுவதற்கும் புலம்பெயர் மக்கள் தயாராக வேண்டும்.

**விடிவை நமக்குத் தொடர்பில்லாத புள்ளிகளில் தேடிச்செல்லும் காரியங்களே தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றன.**

மேலும் வருவாயைப் பயன்படுத்தி நகைகள், வீடு, கார் போன்ற இடாம்பீகப் பொருட்களை வாங்கும்போது பலரிடம் சரியான பொருளாதாரத் திட்டமிடுகை இருப்பதில்லை. மேலும் பணம் மட்டுமே சகல பிரச்சனைகளுக்கும் தீர்வென்ற எண்ணங்களும் நம்மில் பலரிடையே உண்டு. நாலுபேர் நம்மை உயர்வாகப் பாராட்டவேண்டும் என்பதற்காகவோ, அடுத்தவீட்டுக்கார னைவிட மேம்பட்டவர் என்று வீண்மதிப்புப் பெறுவதற்காகவோ, வாழ்க்கையை கொண்டாட்டங்களை அமைத்துக்கொள்ளலாமா? நாம் யார் நம்மால் முடிந்தது எவ்வளவு? என்ற விடயங்களை நமது வருமான அளவிற்குள் சிந்திக்கத்தவறி மற்றவரைவிட நாம் என்ன குறைவா? என்ற கோணத்திலேயே ஒப்பிட்டுச் சிந்திக்கத் தொடங்கிவிடுகிறோம். ஒப்பீடுகளால் உறக்கமின்மை, மனக்கவலை, நீரிழிவு போன்ற நோய்கள் நமது வாசல்தேடி வருகின்றன. ஆதாரபூர்வமாக இங்குள்ள வைத்தியர்களின் கருத்துப்படி டென்மார்க்கிலுள்ள மற்றய இனத்தவரைவிட தமிழ் மக்களே கூடுதலானளவு நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டுள்ளனரெனத் தெரியவருகிறது. இதற்கு முழுமையான மருத்துவம் கிடையாது இருந்தாலும் வாழ்க்கை ஓர் நல்ல காரியத்தை



படிப்பகம்

padippakam



நோக்கியே நடைபெறுகிறது. ஒவ்வொரு நிமிடமும் அது அர்த்தமாகவே வாழ்ந்து முடிக்கப்படுகிறது என்ற கணக்கு நம்மிடம் இருந்தால்; இத்தகைய நோய்கள் நம்மை நெருங்க அச்சமடையும். நம்முள் பரவிநிற்கும் தாக்கங்களின் மறு வெளிப்பாடுகளான உணர்ச்சி வசப்படுதலும், வீண் பகை மூட்டங்களும், ஊமைப்பகைகளும் தொலைந்துபோகும். நாமும் மற்றவருடன் ஒருபொழுதும் ஒப்பீடுகாண முற்படமாட்டோம். உண்மையில நமது பிறப்பிற்கு ஒரு கடமையும்; காரணமும் இருக்கிறது என்ற உணர்வே ஒப்பீடுகளையும் போட்டித் தன்மைகளையும் தவிர்க்கும். எனவேதான் நாம் நல்லபடி வாழவும், மற்றவரை வாழவிடவும் கூடிய மனப்பக்குவம் உள்ள மனிதராக முன்னேறுவதே சகல நோய்களுக்குமான நிவாரணியாகும்.

> **வாழ்வை சரியாக இணைவாக்கிக் கொள்ள முடியாமையால் அதிகமானோர் நோய்களால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.**

மேலும் ஐரோப்பியர்களின் சிந்தனை நோக்குகளையும் நாம் ஏற்றவகையில் அவதானித்தல் வேண்டும். இப்பொழுது அமுலில் இருக்கும் உலக முறைமைகள் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் வகுக்கப்பட்டவையாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளில் அவை எண்ணற்ற தடவைகள் தடக்கி விழுந்து, இலட்சக்கணக்கான உயிர்களையும் காவு கொண்டாகிவிட்டது. எனவேதான் உலகில் தீர்வுகாண முடியாதபடி நிலவுகின்ற கடினமான சிக்கல்களை இனியாவது தீர்ப்பதென்றால் புதிய சிந்தனைப் புள்ளிகளை நோக்கி நமது சிந்தனைகள் நகர்த்தப்பட வேண்டும் என்று பொஸ்னிய, பாலஸ்தீன நாடுகளின் சிக்கல்களில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிய அனுபவமுள்ள டெனிஸ் அமைச்சர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டார். இது நமக்கும்



படிப்பகம்

padippakam



பொருந்திவருகிறது. இதுவரை கண்டுபிடிக்கப்படாத புதிய சிந்தனைகள் நம்மிடையே மலரவேண்டும். புதிய சிந்தனைகளை உருவாக்கக்கூடிய தகுதியைத் தரவல்ல கடும் சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் உலக இனங்களில் ஈழத்தமிழினம் முதன்மையான இடத்தில் இருப்பதை யாவரும் அறிவர். எனவேதான் அனைவருமே மறுபடியும், மறுபடியும் புதிதாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

**உலகம் புதிது, வாழ்வு புதிது, எனவேதான் சிந்தனைகளும் புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.**

இன்று ஐ.நா சபையில் எந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும்; அது எத்தனை எண்ணிக்கை பெரும்பான்மை கொண்டிருந்தாலும்; ஓரேயொரு வல்லரசு மட்டும் அதை விரும்பாவிட்டாலே போதும் தனக்குள்ள "வீட்டோ" அதிகாரத்தைப் பயன்படுத்தி முற்றாகவே நிறுத்திவிட முடியும். இந்த வீட்டோ அதிகாரம் ஐ.நா. மன்றிலிருக்கும் அதிகாரிகளின் கைகளில்தான் இருக்கிறதென நாம் நீண்டகாலமாகவே நினைத்து வந்தோம். ஆனால் மேலை நாடுகளில் வந்தபின்புதான் புரிகிறது ஒவ்வொரு ஐரோப்பியக் குடிமகனது கைகளிலும் வீட்டோ அதிகாரம் இருக்கிறதென்ற உண்மை. தமது தேசியத்திற்குப் பங்கம்வரும்விதத்தில் தம்முன் யாராவது கதைத்தாலோ, செயற்பட்டாலோ ஆட்சேபம் தெரிவித்து, அவற்றைச் செயற்பட முடியாதவாறு தடுத்துநிற்கும் தெளிவான தனிமனித வல்லமை என்னும் வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்கப் பழகியிருக்கிறார்கள். இதைப்போலவே தென்னாபிரிக்க கறுப்பின மக்களிடையேயும் "தேசியத்தின் ஈட்டி" என்ற சொற்பதம் கடைப்பிடிக்கப்பட்டது. இதன் மூலம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மக்கள் மனதில் கட்டியெழுப்பியது தேசியத்தைக் காப்பதற்கான வீட்டோ



படிப்பகம்

padippakam



அதிகார உணர்வையே என்பதை மறுத்தல் முடியாது. ஆனால் தமிழர் தேசியத்தைக் காத்தல் என்னும் வீட்டோ அதிகாரத்தை நாம் கண்காணாத இடத்தில் தொலைத்து பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. நமது இனத்திற்குப் பங்கம் வரும் இடங்களில் வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்கும் அறிவுத் தெளிவையும்; புதிய சிந்தனைகளையும் நாம் மறுபடியும் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. இது நம்மால் முடியும் ஆனால் நம்மிடையே எல்லாத் திறமைகளும் இருந்தும்; அவை எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் தாழ்வு மனப்பான்மையானது நீண்டகாலமாகவே எம்முடன் வாழ்ந்து, எம்மையே கருவறுத்து வருகிறது. இந்தத் தடையை தகர்க்கும் வல்லமை ஒவ்வொருவரதும் சுய அறிவிற்குள்ளேயே மறைந்து கிடக்கிறது.

**தேசியத்தைக் காக்கும் வீட்டோ அதிகாரம் நமது கைகளை விட்டுப் போயுள்ளது.**

நாம் புலம்பெயர்ந்தது முக்கியமல்ல; புலம்பெயர்ந்ததால் ஒட்டு மொத்தமாகத் தமிழினமும், தாயகமும் அடைந்த பயன் என்ன? இந்தக் கேள்விக்கு ஆரோக்கியமான பதிலளிக்க வேண்டிய கடமை ஒவ்வொரு புலம்பெயர் தமிழ்க் குடிமகனுக்கும் இருக்கிறது. இதற்கு அவசியமான அறிவை உருவாக்க வேண்டுமானால் நம்முள் வாழும் பல்வேறுபட்ட சிக்கல்களையும் சீர்தூக்கி, அவற்றை உருவாக்கக் காரணமாயிருக்கும் விளக்கமின்மைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். உண்மையாகவே வரலாற்றில் புலம்பெயர் தமிழனுக்கும் ஓரிடம் இருக்கிறது. அதை நாம் ஏற்றமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



படிப்பகம்

padippakam



## வாசிக்க நேரம் கிடைக்கவில்லையா உங்களுக்காக சுருக்கக்குறிப்புக்கள்.

நூல்களை வாசிக்க நேரமில்லை. அல்லது அரைப்பகுதிவரையே வாசிக்க முடிந்தது என்னும் அவலமான வாசகர் குரல்களையே தொடர்ந்தும் கேட்பதைத் தவிர்ப்பதற்காக; இக்கட்டுரையின் மூலக்கருத்துக்கள் இங்கே சுருக்கித் தரப்படுகின்றன.

- டென்மார்க்கில் வாழும் தமிழ் மக்களிடையே தோன்றும் முரண்பாடுகளைத் தவிர்க்க வேண்டுமானால்; நாமும் நம்மிடையே டெனிஸ் மக்களைப்போல எழுதப்பட்ட சட்டங்களை உருவாக்குதல் வேண்டும்.

- ஆரம்பத்தில் குழம்பிக்கிடந்த புலம்பெயர் வாழ்வு இப்போது தனது பாரம்பரியப் பிரிவுகளில் சேர்ந்து அமைதிகாண ஆசைப்படுகிறது. இது நமக்குத் தெரியாமலே சமூகத்தை படிக்கட்டுக்களாகப் பிரித்து வருகிறது.

- தாயகத்தில் எப்படி வாழ்க்கையை நடத்தினோமோ? அதே அனுபவங்களையே இங்கும் சரியானவையென எண்ணுகிறோம். ஆனால் இங்கு பின்னணி மாறியிருக்கிறது. அதைநாம் போதியளவு புரிந்துகொள்ளவில்லை.

- மனிதன் கண்டுபிடித்த பிரதான சித்தாந்தங்களான முதலாளித்துவம்; கம்யூனிசம்; அணிசேராக்கொள்கை ஆகியவற்றின் கருச்சிதைவே இன்று உலகில் முகமிழந்து நிற்கும் 140 இலட்சம் புலம்பெயர் மக்களாகும்.

- ஒருவர் தனது ஊரில் அல்லது தான் வாழ்ந்த கிராமத்தில் பெற்றுக்கொண்ட மதிப்பை அப்படியே இங்கும் பெற்றுக்கொள்ள முடியாதநிலை; மேலும் அதை வழங்கக்கூட யாருமற்ற வாழ்வுநிலை.



படிப்பகம்

padippakam



- சிறுதவறு நடந்தாலே போதும்; சாவிற்கும் இல்லையென்றளவிற்கு தீய வார்த்தைகளைப் பாவித்துவிடத் தயங்காத நிலைகெட்ட வாழ்வு நிலவுகிறது. நாக்கே பயங்கரமான ஆயுதமாகப் பயன்படுகிறது.

- சாதி, சமயம், பிறந்தஇடம் போன்றவற்றால் முரண்பாடு கொள்ளுதல். தனக்குக் கிடைக்காத எதையுமே மற்றவருக்குக் கிடைக்கவிடாத மனோபாவம். எதிலுமே பற்றின்மையென அவலங்கள் தொடர்கின்றன.

- சட்டங்களை அதிகம் பாவிக்காது பெரும்பாலும் வழமைகளை வைத்தே வாழமுற்பட்ட சமூகம். வெளிநாட்டிலும் அதே வழமைகளை வைத்து வாழமுற்படுவதால் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

- வர்த்தகர்சங்கங்களும் எழுத்துரீதியான உடன்பாடுகளும் இல்லாமையால்; போட்டிபோட்டு மூடப்பட்டன பல தமிழ்க்கடைகள்; அவற்றை அந்தநிலைக்குத் தள்ளிச் சென்றது நுகர்வோரின் சுயநலப் போக்குகளும்தான்.

- எதைச் செய்வது? எதைச் செய்தல்கூடாது? என்பதற்கு எந்தவாழ்வியல் வரைமுறையும் எழுத்துரீதியாக இல்லை. இதனால் சமூகவாழ்வு பெரும் தேக்கமடைந்துள்ளது. மனத்தடைகள் வாழ்வை சீராக இயங்கவிடுவதில்லை.

- டெனிஸ் தொடர்பு சாதனங்களில் தமிழ் மக்களுக்குப் பாதகமான கருத்துக்களே நிலவுகின்றன. இத்தகு தப்பபிப்பிராயங்களை உருவாக்கிவைத்ததில் நமக்கும் குறிப்பிடத்தக்களவு பங்குண்டு.

- ஒருவருக்கு ஏதாவது சலுகை கிடைத்துவிட்டால் போதும். அதற்கான காரணங்களைச் சரிவர ஆராயாமலே போர்க்கொடி தூக்கும் புலம்பெயர் உள்ளங்கள்.



படிப்பகம்

padippakam



- தம்மை ஏன் பயன்படுத்தவில்லை? என்பதை வெளிப்படையாகக் கேட்டால் கெளரவக்குறைவென நினைக்கிறோம்; கோபப்படுகிறோம்; எதிர்ப்பைக்காட்ட எண்ணி ஒதுங்கிக்கொள்கிறோம்.

- ஒவ்வொரு கொண்டாட்டங்களிலும் சேரும் பணத்தில் ஒருபகுதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கலாம். பிறந்த ஒவ்வொரு ஆண்டிற்கும் சிறுதொகை பணத்தை சேகரித்து, அப்பணத்தை நம் தாயகத்தின் மேன்மைக்குப் பயன்படுத்தலாம் அல்லவா?

- சினிமாப் படங்களும்; சினிமா வெளியீடுகளும்; நமது உழைப்பில் பெரும்பகுதியைச் சுரண்டிவிடுகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள சீ.டீ.க்களை எண்ணினாலே போதும்; நமது பாதையை நாமே கண்டு பிடிக்கலாம்.

- சர்வதேச சட்டங்களுக்கு அமையவே அகதி அந்தஸ்த்து வழங்கப்படுவதைக் கவனத்தில் எடுக்காது நடைபெறும் காரியங்களால் ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்து நமக்குச் பாதகமாக மாறியுள்ளதெனலாம்.

- ஐரோப்பிய வாழ்வுக்கு இசைவாக்கம் அடையாமையால் உடல்; உள வருத்தங்களால் பீடிக்கப்பட்டிருப்போர் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிக்கிறது.

- தமிழர் தேசியத்திற்குப் பங்கம்வராமல் காக்கக்கூடிய தேசியத்தின் ஈட்டி என்னும் இனப்பாதுகாப்பு உணர்வானது நம்மிடையே தொலைந்து போயுள்ளது.

- புலம்பெயர்ந்ததால் ஏற்படவுள்ள விளைவுகள் ஆரோக்கியம்தருமா? இக்கேள்விக்கு நல்ல பதில் சொல்லக்கூடியவாறு வாழ்வை இனியாவது அமைப்போம்.



படிப்பகம்

padippakam





# கி.பி. 2000 ற்குப் பிற்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் புலம்பெயர் தமிழர்கள்.

**ஐரோப்பா ஒன்றுபடமுன் எப்படியாகச் சிந்தித்தோமோ அப்படியே ஐரோப்பா ஒன்றுபட்ட பின்பும் சிந்திக்கிறோம்.**

ஐரோப்பிய மக்கள் ஐரோப்பா ஒன்றியமாவதற்கு முன் சிந்தித்தமைக்கும்; அது ஒன்றியமாக இணைந்தபின் சிந்திக்க முற்படுவதற்கும் அடிதலையான வேறுபாடுகள் தென்படும் என்பது முன்னரே எதிர்பார்க்கப் பட்டது. இப்பொழுது அந்த வேறுபாடுகளை ஐரோப்பாவிற்குள்ளேயே வாழ்ந்து, கண்கூடாகவே கண்டுகொள்ளும் அனுபவம் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு நேரடியாகவே வாய்த்திருக்கிறது. ஒன்றுபட்ட ஐரோப்பா என்ன முடிவெடுத்தாலும் அதற்குத் தலையாட்டுவதைத்தவிர மாற்றுவழியில்லாத புலம்பெயர் தமிழரின் எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டது. புலம்பெயர்ந்தோரின் வாழ்வை மேம்படுத்துவது பற்றியும்; அதன் அகவயப்பட்ட சிக்கல்கள்பற்றியும் இதுவரை நிறையவே பேசப்பட்டுவிட்டது; எழுதப்பட்டதும் அப்படியே. ஆயினும்



படிப்பகம்

padippakam



புலம்பெயர் மக்களின் வாழ்வு, ஐரோப்பிய ஒன்றிய அமைவிற்கு முன்பிருந்த சூழலில் வைத்து எப்படி சீர்தூக்கப்பட்டதோ, அப்படியே ஒன்றிய அமைவிற்குப் பின்னரும் நோக்கப்பட்டு வருவதானது, கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய நுட்பமான உண்மையாகும். உள்ளீட்டு ரீதியாக மேலும் மேலும் பிரிந்து செல்லும் முரண்பாடுகளையே கடைப்பிடித்து வரும் புலம்பெயர் வாழ்வை மதிப்பீடு செய்யும் எவரும், ஐரோப்பிய ஒன்றியத்தில் நிகழும் மாறுதல்கள் எவையும், புலம்பெயர் தமிழரிடையே எத்தகைய விழிப்புணர்வையும் ஏற்படுத்தி விடவில்லை என்ற உண்மையை விளங்கிக்கொள்ளல் என்பது இனியும் கடினமான பணியல்ல.

**ஐரோப்பிய ஒன்றியம் அடுத்த நூற்றாண்டுக்காக அணிவகுத்து நிற்கிறது. ஆனால் நாமோ அதுபற்றி எந்தவித அக்கறையுமின்றி வாழ்ந்து வருகிறோம்.**

ஒன்றுபட்ட ஐரோப்பாவின் மூலக் கோட்பாடு, கூட்டு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வளங்களின் உச்சப் பயன்பாட்டை எட்டிப்பிடிப்பதும்; வாழ்க்கைத் தரத்தின் உச்சப்புள்ளியைத் தொட்டபடியே அடுத்த நூற்றாண்டுக்குள் புகுந்துவிடுவதுமாகும். இதற்காக அவர்கள் அபிவிருத்தி, பொருளாதாரம், பாதுகாப்பு, உயர்கல்வியென பல்வேறு தளங்களிலும் அடையக்கூடிய முன்னேற்றங்களுக்கு ஏற்பதாக தமது சமூகத்தை அணிவகுக்கத் தொடங்கிவிட்டார்கள். விரும்பியோ விரும்பாமலோ நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளில் ஏகோபித்த மாறுதல்களைக் காணமறுத்து, கண்களை மூடுவதால் உலகம் இருண்டுவிடுமென எண்ண முடியாது. ஐரோப்பா நம்மைப்பற்றி தனது இணைவிற்குள் சிந்திக்காவிட்டாலும், ஒன்றியப் பின்னணியானது நம்மை மேலும் சீர்குலைத்து



படிப்பகம்

padippakam



விடாதிருப்பதற்காக இணைந்த சிந்தனைகளும் கூட்டு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவேண்டியது நம் முன்னுள்ள கட்டாய பணிகளாகத் தெரிகிறது.

**ஐக்கிய அமெரிக்காவின் அடுத்த தலைமுறைக்கும் ஐக்கிய ஐரோப்பாவின் அடுத்த தலைமுறைக்குமான பனிப்போர் தொடங்கிவிட்டதா?**

இச்சிறு கட்டுரை எல்லாவற்றையும் உள்ளடக்கியதல்ல. மேலே சுட்டிக்காட்டிய பல்வேறு விடயங்களில் ஒருசில அடிப்படை விடயங்கள் பற்றியே ஆராய முற்படுகிறது. இறுதியாக நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெற்றார் என்பது இங்கு நமக்கு முக்கியமல்ல; தேர்தலில் என்ன கொள்கை முக்கியமாகப் பேசப்பட்டது என்பதே முக்கியமானது. அங்கு பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியானது இனி என்னென்ன உட்கூறுகளைக் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதே, அதிக கவனமெடுத்துப் பேசப்பட்ட விடயம். அதுபோலவே ஐரோப்பிய ஒன்றியமும் பாடசாலைக் கல்வியில் பல அபரிமிதமான முன்னேற்றங்களைக் கட்டாயமாக உள்ளடக்கத் தொடங்கியிருக்கிறது. இது ஐக்கிய அமெரிக்காவினது அடுத்த தலைமுறையினருக்கும், ஐக்கிய ஐரோப்பாவின் அடுத்த தலைமுறையினருக்கும் இடையேயான அடுத்த நூற்றாண்டு வளர்ச்சிக்குரிய பனிப்போரின் அடையாளங்களாகும். இணையவலை (Internet) பாடசாலைகளுக்குள் கட்டாயமாகக் கொண்டுவரப்படுகிறது. வீடியோ படப்பிடிப்பு, எடிட்டிங், ஒளிப்பதிவு போன்ற கருமங்களுக்கான தொழில்நுட்பக்கூடம், கணணித் தொழில் நுட்பத்தில் நடைபெறும் அசுர மாற்றங்களையெல்லாம் உடனடியாகச் சேர்த்துக்கொள்ளல், இயந்திர பாவனைகளைக் கூடுதலாக அறிமுகப்படுத்தலென



படிப்பகம்

padippakam



இதில் எண்ணற்ற வேலைத்திட்டங்கள் அடங்குகின்றன. டென்மார்க்கிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் தற்போது மேற்சொன்ன மாற்றங்களே மிகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. ஒவ்வொரு பாடசாலை அதிபரும், அடுத்த ஆண்டில் தமது பாடசாலை எப்படி மாற்றியமைக்கப் படவிருக்கிறது, அங்கு என்னென்ன மாற்றங்கள் நிகழவுள்ளன என்பதுபற்றியே பெற்றோர்களை அழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**டென்மார்க்கில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் டெனிஸ்மொழியே தாய்மொழியாகி யிருக்கிறது.**

இந்த அசுரவளர்ச்சி இப்போதய ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவிற்குமிடையே பேரிடைவெளியை ஏற்படுத்தி வைக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டிய விடயமல்ல. இந்த அபரிமிதமான வளர்ச்சியை ஐரோப்பிய மாணவர்கள் சுலபமாக எட்டிப்பிடிக்க வேண்டுமானால் அவர்களிடையே பல நுண்பாகத் தகுதிகளை ஏற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எல்லா நவீனத்துவங்களையும் அறிவதற்கும், அதில் சிறப்புத்தகுதி பெறுவதற்கும் ஊடகமாக உள்ளதான தாய்மொழிக்கல்வியே முதலில் அவசியமென வலியுறுத்தப்பட்டுள்ளது. மற்றக் கற்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேர அளவைவிட கூடுதலான பாடநேரத்தை தாய்மொழிக்கு ஒதுக்கவேண்டியது அவசியம் என்னும் கல்வி வெள்ளை அறிக்கை இங்கு இரண்டாண்டுகளுக்கு முன்னரே அமுலுக்கு வந்துவிட்டது. இந்தத் தாய்மொழிக் கல்வியென்பது டென்மார்க்கில் வாழும் தமிழ் மாணவருக்கும் டெனிஸ் மொழியே தாய்மொழி என்ற கொள்கையாயிருப்பது வேடிக்கையான உண்மையாகும். இதுபோலவே இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் அமையுமென நம்பலாம்.



படிப்பகம்

padippakam



டென்மார்க்கில் தமிழ்ப்பிள்ளைகளுக்கான தமிழ்மொழிக் கல்வி பெரும்பாலும் அவ்வப் பாடசாலைகளிலேயே கடந்த பத்தாண்டு காலமாக நடைபெற்று வருகிறது. குறைந்தது பன்னிரெண்டு பிள்ளைகள் இருக்கும் இடங்களிலெல்லாம் நகரசபைகளால் தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்குரிய பயிற்சி வகுப்புகளானது கல்வி அமைச்சாலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாலும் வழங்கப்பட்டும் வருகின்றது. இந்த வாய்ப்பு தமிழர்களுக்கு மட்டுமல்ல, இதர புலம்பெயர்ந்தோர் மொழிகளுக்கும் ஏற்புடையதாகும். இவ்விதம் புலம்பெயர் தேசிய இனங்களின் தாய்மொழிக் கற்றலுக்காக ஒதுக்கப்படும் பணத்தை திசைதிருப்பி, அதன் மூலம் புலம்பெயர் தமிழ்ப் பிள்ளைகளுக்கு டெனிஸ் மொழிக்கல்வியை மேலும் அதிகரித்தல் வேண்டும் என்னும் வாதம் டென்மார்க்கில் தற்போது முன்னைவிட வேகமாக நடைபெறுகிறது. இது வெளிப்பார்வைக்கு மிக அழகானதும், நேர்த்தியானதுமாகத் தென்பட்டாலும், அதன் சுயமுகம் மிகவும் பாதகமானது. இத்தகைய சட்டங்களின் பாதகம்பற்றி புலம்பெயர் தமிழ் மக்களிடையே ஆரோக்கியமான சிந்தனைகள் வளர்த்தெடுக்கப்படவில்லை. டென்மார்க்கின் உற்பத்தித்துறையில் தமிழ்மக்கள் கொண்டுள்ள பங்கு, அவர்கள் செலுத்தும் உயர்ந்தவரி ஆகியவிடயங்களைச் சீர்தூக்கினால் அவர்களது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக ஒதுக்கப்படும் நிதியில் எந்தவிதமான மாற்றமும் செய்தலாகாது

> **டென்மார்க்கின் உற்பத்தித் துறையில் தமிழ் மக்கள் கொண்டுள்ள பங்கு, செலுத்தும் உயர்ந்தவரி ஆகியவற்றை நோக்கினால் தாய்மொழிக் கல்விக்கு மேலும் வசதிசெய்ய வேண்டியது நகரசபைகளின் கடமையாகும்.**



படிப்பகம்

padippakam



என்ற கருத்து பல டெனிஸ் மக்களிடையே உள்ளது. ஆனால் இதுகுறித்த கருத்தியல் தமிழ் மக்களிடையே சரியான முறையில் வளர்த்தெடுக்கப்படவில்லை. இது நமக்குள்ள அடிப்படை உரிமை என்பதை நாம் மறந்துவிடலாகாது.

**தாய்மொழியின் அவசியத்தை பிள்ளைக்கு ஏற்றமுறையில் அடையாளம் காட்டவேண்டியது அதன் வகுப்பறைக் கல்வியின் பிரதான பணியாகும்.**

" நம் பிள்ளைகள் கூடுதலான நேரம் ஐரோப்பிய மொழிகளையே கற்கிறார்கள். அவர்களுடைய வகுப்புத் தோழர்களுடன் அந்தந்த நாட்டுத் தேசிய மொழிகளிலேயே உரையாடுகிறார்கள். அத்தோடு நாம் தமிழைப் பாவனைப்படுத்தும் நேரத்தின் விகிதமும் வருடா வருடம் குறைவடைந்தே செல்கிறது. எனவே பிள்ளைகளுக்கு தாய்மொழியில் அக்கறையேற்பட வாய்ப்புக்கள் இல்லை ! " என்பது ஐரோப்பாவிலுள்ள பெரும் பான்மையான தமிழ்ப் பெற்றோரதும், பிள்ளைகளதும் பொதுவான குரலாகும். ஆனால் இத்தகைய கருத்துக்களில் ஓர் மகத்தான பலவீனம் மறைந்திருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு ஐரோப்பியரைச் சார்ந்ததல்ல. உண்மையில் தம்மிடையே உள்ள குரலின் பலவீனத்தைக் கண்டுபிடித்துச் சீர்படுத்திக் கொள்ள வேண்டியது புலம்பெயர் தமிழ்ப் பெற்றோர்களது தலையான கடமையாகும். ஓர்பிள்ளை பெற்றுக்கொண்டுள்ள பாடசாலைக்கல்வி ஆரோக்கியமாகவும், சரியானதிசையிலும் அடுக்கப் பட்டிருந்தால் அத்தகு கல்வியின் துணையுடன் ஒளிக்கீற்றுப்போல ஓர் உண்மையை பிள்ளைகளின் அறிவு பற்றிக்கொள்ளும். அப்போது தன்னுடைய தாய்மொழி தன்னுடைய உயர்வுக்கு தலையானதென்ற தெளிவு, தவிர்க்க முடியாத நியதியாக தம்முன் வந்துநிற்கக் காண்பர். அந்த



படிப்பகம்

padippakam



இடத்தை நோக்கி பிள்ளையை நகர்த்தியிருக்க வேண்டியது கல்வியின் பிரதான பணிகளில் ஒன்றல்லவா? ஏனென்றால் இதை வலியுறுத்தும் பொருட்டுத்தானே டெனிஸ் மொழியைக் கற்பிக்கும்நேரம் மேலும் மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளது என்ற உண்மையை கண்கூடாகக் கண்டபின்னரும்கூட, "தாய் மொழிக்கல்வியைக் கற்பதற்கு நம் பிள்ளைகளிடையே தயக்கமிருக்கிறது!" என்ற நொடித்துப்போன கூற்றையே பேசிக்கொண்டிருப்போர், தமது பிள்ளையின் வகுப்பறைக்கல்வி அதன் தாய்மொழியை அதற்கு சரியாக அடையாளங் காட்டியிருக்கிறதா அல்லது மௌனமாகவே தவிர்த்துச் சென்றுள்ளதா என்பதை ஏனோ சீர்தூக்கிப் பார்க்கத் தவறிவிடுகிறார்கள்.

**எல்லா விடயங்களையும் புரிந்து ஓர் சமநிலையை உருவாக்க அச்சாணிபோல அவசியமாயிருப்பது தாய்மொழியாகும்.**

சென்ற ஆண்டு டென்மார்க்கில் சில பாடசாலைகளில் ஒன்பதாம், பத்தாம் வகுப்புகளுக்கான பரீட்சைகளில் சில தமிழ் மாணவர்கள் டெனிஸ், ஜேர்மன், பிரெஞ்சு போன்ற பிறமொழிகள் உட்பட இதரபாடங்களிலும் அதிகூடிய (100:100) புள்ளிகளைப் பெற்று பாடசாலையிலேயே முதல் மாணவர்களாகத் தேறி யிருந்தார்கள். இவர்களுடைய வெற்றிக்குக் காரணம் யாதென ஆய்வு செய்தபோது அவர் களிடையே சிந்தனை மொழியாகத் தாய்மொழியிருந்ததும், தாய்மொழியில் அவர்கள் மிகச்சிறந்த தகுதிபெற்ற மாணவர்களாக இருந்தமையுமே, அவர்களின் வெற்றியின் அடிப்படையென அறியப்பட்டது. மேலும் அவர்கள் தாய்மொழியில் நாட்டம் கொள்வதற்கான விசையை அவர்களின் டெனிஸ் வகுப்பறைக்கல்வியும் வழங்கியிருந்தமை தெரிந்தது. சில இடங்களில் இதற்குப்



படிப்பகம்

padippakam



புறநடையான உதாரணங்கள் இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் பிள்ளைகளின் சரியான வெற்றிக்கு தாய்மொழி முக்கியமான அடித்தளம் என்பதை ஏற்றுக்கொள்ளாத உலகக் கல்வியாளர் எங்குமே கிடையாது. எனினும் இத்தகைய உதாரணங்களானது தாய் மொழியை உரியமுறையில் கற்க வாய்ப்பில்லாதிருக்கும், அல்லது வாய்ப்பைத் தவறவிட்ட பிள்ளை களிடையே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிடப் பயன்படுத்தப் படலாகாது. மனிதமூளை ஒரு நொடிப்பொழுதிற்குள் எண்ணற்ற திசைகளில் பிரயாணம் பண்ணுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பல காரியங்களைப் புரிகிறது. இந்த நேரத்தில் அதனுள் இயற்கையாகவே அமைந்துவிட வேண்டிய சமநிலையை எட்டிப்பிடிக்க, அச்சாணிபோலிருக்கும் தாய்மொழிக்கல்வி அவசியம் என்ற உண்மையை உணர்த்துவதற்கே இப்படிப்பட்ட உதாரணங்களைப் பயன்படுத்த வேண்டியது முக்கியமாகும். எப்போதும் சமூக வளர்ச்சிக்குரிய விடயங்களை கேலிப்பாங்கில் காணமுற்படுவது எதிர்விளைவுகளையே ஏற்படுத்திவிடும் என்பது தெளிவாகக் கிடைத்துவிட்ட முக்கிய புலம்பெயர் அனுபவமாகும்.

> **சமூக வளர்ச்சிக்குரிய காரியங்களை கேலிப்பாங்கில் பார்ப்பது எதிர் விளைவுகளை ஏற்படுத்திவிடலாம்.**

இதுபோல 18வயதுக்கு மேற்பட்ட தமிழரிடையே டெனிஸ் மொழியைப் போதிப்பதற்கான மொழிப் பாடசாலைகளிலும் புலம்பெயர் மக்கள் குறித்துப் பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவங்கள் திரட்டப்பட்டுவிட்டன. இதன்படி பெரும்பான்மையான தமிழர்கள் தாய்மொழியைப் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாகவே உள்ளார்கள். ஆனாலும் ஒருசிலரால்



படிப்பகம்

padippakam



மட்டுமே டெனிஸ் மொழியில் தகுதிபெற்று தமது தொழில் வாய்ப்புக்களைச் சிறந்தமுறையில் மேம்படுத்திக்கொள்ள முடிந்திருக்கிறது. அனேகரால் இந்த இலக்கை எட்டிப்பிடிக்க முடியாமைக்குரிய பிரதான காரணம்யாது ? இதற்குரிய விடையைக் கண்டுபிடிக்க மேற்சொன்ன கடந்த பத்தாண்டுகால அனுபவங்களே போதுமானதாக இருந்தன. எப்போதுமே பாஷையை அறிவதென்பது வேறு, அந்தப்பாஷையானது எப்படிக் கட்டியமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் அறிவென்பதுவேறு. தாய் மொழிக் கட்டமைவுபற்றிய விளக்கமே ஒருவருக்குப் பிறமொழியைக் கற்பதற்குரிய அடிப்படையை வழங்கும். தமிழ் மக்களிடையே தமிழ் இலக்கண அறிவானது மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தமையே டெனிஸ் மொழியைப் பாடசாலை வழியே கற்பதற்கு பிரதான தடையாக இருந்தமை தெரியவந்தது. எனவேதான் நேர்த்தியான தாய்மொழிக் கல்வியென்பது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, புலம்பெயர் சூழலில் பெரியவர்களுக்கும் அவசியமானதென்ற உண்மை தற்போது சந்தேகத்திற்கிடமின்றி நிதர்சனமாகியிருக்கிறது.

**மொழியை அறிவது வேறு, அந்தமொழி எவ்வாறு கட்டியமைக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிவது வேறு. பிற மொழிகளை இலகுவாக அறிய உதவக்கூடிய மொழியின் கட்டமைவுபற்றிய கல்வி நம்மிடையே சிறப்பாக வளர்க்கப்படவில்லை.**

இந்த இடத்தில் வைத்துத்தான் நாம் தமிழ் இலக்கணத்தின் மீதும் ஓர் பார்வையை வீசிச்செல்ல வேண்டியிருக்கிறது. காரணம் தமிழ் இலக்கணமானது



படிப்பகம்

padippakam



தொல்காப்பியர், நன்னூலார், சுவாமிநாததேசிகர், நல்லைநகர் ஆறுமுகநாவலர் ஆகியோரின் இலக்கணக் கொள்கைகளிலிருந்து இன்னும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாதநிலையிலேயே இருந்து வருகிறது என்ற வருத்தத்தை இங்கு சுட்டிக்காட்டாவிட்டாலும், மொழிஇலக்கணம் விஞ்ஞான யுகத்தின் மாணவரைக் கவரக்கூடிய விதமாகவும், அவர்கள் களைப்படையாமல் கற்கக் கூடியவாறும் மாற்றியமைக்கப் படவில்லையே, என்ற ஏக்கம் நியாயமானதே. எனவேதான் தொழில் நுட்பம்சார் ஐரோப்பிய வாழ்வை வெற்றிகொள்ள புதிய தமிழ் இலக்கணம் கட்டியமைக்கப்பட வேண்டும் என்பதும், விஞ்ஞானத்திற்கு இயைபாக்கமடையாத இலக்கண இடர்களிலிருந்து மொழி தன்னை எவ்வாறாயினும் விடுவித்துக்கொள்ள வேண்டியதும் இங்கு அவசியமாகிறது.

**விஞ்ஞானத்திற்கு இயைபாக்கமடையாத இலக்கண இடர்களிலிருந்து மொழி தன்னை எவ்வாறாயினும் விடுவித்துக் கொள்ள வேண்டும்**

இதற்காக ஆரோக்கியமான கூட்டு வேலைத்திட்டங்கள் அவசியம். எனினும் சில முன்மொழிவுகளை மட்டும் இங்கு மேலோட்டமாகச் சுட்டிக்காட்டிச் செல்ல முடியும். தமிழ் மொழியில் கிடையான தளம் கொண்ட X அச்சில் உயிர் எழுத்துக்களும், குத்தான தளம் கொண்ட Y அச்சில் மெய்யெழுத்துக்களும் அமைக்கப்பட்டு, அவை இரண்டையும் இணைப்பதன் மூலமே உயிர் மெய் எழுத்துக்கள் பெறப்படுகின்றன. உண்மையில் இந்த முறையானது கணிதத்தில் ஆழ்கூற்றுத்தளம் என்னும் ( CO. ORDINATE SYSTEM ) முறைமை சார்ந்தது. இன்றைய ஐரோப்பாவின் ஏவுகணை செலுத்தும் தொழில் நுட்பமோ, அல்லது நிலப் பயன்பாடோ, அல்லது கணினி விளையாட்டுக்களோ



படிப்பகம்

padippakam



எதுவாக இருப்பினும், அங்கு அடிநாதமாக இயங்குவது கணிதத்தின் இவ் ஆழ்கூற்றுத்தள முறைமையே. இதையே நமது மாணவர்கள் டெனிஸ், ஆங்கிலம் போன்ற மொழிகளின் வழியே கற்றுக் கொண்டிருக் கிறார்கள். நாம் எதிர்பாராத விதமாக, தமிழ் இலக்கணத்தின் ஆரம்பக்கூறே விஞ்ஞானத்துடன் கை குலுக்கக்கூடிய விதத்தில் அமைந்திருப்பது புது நம்பிக்கை தருவதாயுள்ளது. எனவேதான் தமிழ் இலக்கணத்தை இப்படிப்பட்டதோர் பின்னணி யோடு எதிர்கொள்வது ஐரோப்பியச் சூழலில் ஆரோக்கிய மானதாக அமையலாம். மேலும் இந்த வழியாகச் சென்றால் புணரியலில் உள்ள பெரும்பாலான பின்னடைவுகளை மாணவர்கள் குறுக்காகக் கடந்து சென்றுவிடவும் முடிகிறது. இத்தகைய நவீன மொழி இலக்கணமொன்றை எடுகோளாகத் தயாரித்து, டென்மார்க்கிலுள்ள சில 14 வயதுக்கு மேற்பட்ட, தமிழில் பின்தங்கிய நிலையிலிருந்த மாணவரிடையே பயன்படுத்தியபோது, சில சாதகமான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவேதான் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசும் மொழிக்கற்கை நிலையிலிருந்து விடுபட உதவும் புத்தம்புதுத் தமிழ் இலக்கண நூல் ஒன்று ஐரோப்பிய ஒன்றியத்திற்குட்பட்ட புலம்பெயர் வாழ்வுக்கு மிகமிக அவசியமாகிறது.

**சுருக்கமான அதேவேளை விளக்கமான புத்தம் புதிய தமிழ் இலக்கணநூல் உருவாக்கப்பட வேண்டியது மிகமிக அவசியம்.**

இதுபோல குழந்தைகளுக்கு 0 – 3 வயதுக்குட்பட்ட ஆரம்ப நிலையிலேயே தாய்மொழி அறிவை ஏற்படுத்தி, அதன்பின் அவர்களை ஐரோப்பிய மொழிக்குத் தயாராக்கும்போது இருமொழிகளிலுமே அசாதாரண



படிப்பகம்

padippakam



வீச்சுக்கொண்டவர்களாக அவர்கள் மேம்படுவதை, பிள்ளைகள் பராமரிப்பு நிலைய அனுபவங்களினூடாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவேதான் பிள்ளைகளை வளர்ப்பது எப்படியென்பதற்காக ஏற்கெனவே வேறு வேறு நாட்டுச் சூழல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நூல்களையே இங்கும் பாவனைப்படுத்துவதைவிட, ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் அமைவுபெற்றுள்ள பின்னணி களுக்கேற்ப புலம்பெயர் தமிழ்ப் பிள்ளைகளை வளர்ப்பது எப்படியென்ற பிள்ளைவளர்ப்பு நூல்களைப் புதிதாகத் தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது. நானூறு ஆண்டுகாலமாக சந்திக்க நேர்ந்துவிட்ட காலனித்துவப் பின்னடைவுகளை நிரவு செய்து, தலைநிமிர்ந்து நிற்கக்கூடியதும் தாய்த்தமிழ் நிலத்திற்கு மேன்மை தரக்கூடியதுமான ஓர் சந்ததியை உருவாக்க, ஐரோப்பிய ஒன்றியத்தை நாம் எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கான வேலைத்திட்டம் புலம் பெயர்ந்தோரிடையே உருவாக்கப்படல் வேண்டும். ஐரோப்பிய ஒன்றியமானது கடந்தகாலங்கள் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறது. ஆனால் அதன் செயற்பாடுகள் யாவும், எங்கு வளங்கள் கிடைக்கின்றனவோ, அவற்றை முந்திச் சென்று பறித்துவிடுவது என்ற கொள்கையில் மட்டும், அது கடந்தகாலம், கோபம், பகை எதுவும் பார்ப்பதாகத் தெரியவில்லை. இதைத் தவறான கொள்கையெனப் பேசுவதிலும், மனமுடைவதிலும் பல நூற்றாண்டுகளை இழந்த அனுபவம் ஆசிய நாட்டவர்களுக்கு இருக்கிறது. உண்மையில் இதைத் தவறாகப் பார்க்காது, பிரபஞ்சத்தில் நிலைத்திருப்பதற்கான தலைமைக் கொள்கையாக நோக்கும்

**ஐரோப்பிய ஒன்றியத்திற்குட்பட்ட பின்னணிகளுக்கேற்ப பிள்ளைகளை வளர்ப்பதற்கேற்ற புதிய பிள்ளைகள் வளர்ப்பு நூல்களை உருவாக்க வேண்டும்.**



படிப்பகம்

padippakam



பழக்கம் ஐரோப்பியரிடம் உள்ளது. எனவே வளங்களைப் பயன் படுத்துவது எப்படியென்ற கொள்கையில் நம்மிடையே போதிய தெளிவுநிலை ஏற்படுத்தப் பட வேண்டியதும் இங்கு அவசியமாகும்.

**வாழ்க்கை கி. பி. 2000 த்தை நெருங்கினாலும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருமைகளை நிலை நிறுத்த ஆசைகொள்ளும் போக்கிலிருந்து சமூகம் மாறவில்லை.**

கி. பி. 2000 இற்குப் பின் ஐரோப்பிய மக்களின் வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பது குறித்த பணிகளில் ஐரோப்பியர் கண்ணுறங்காது ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் ஐரோப்பாவில் தமிழ் மக்கள் ஆற்ற முற்படும் கருமங்களிலோ இத்தகைய தேவை உணரப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பத்திரிகைகளில் வரும் சமூக அக்கறையுள்ள கட்டுரைகளின்படி பார்த்தால் ஐரோப்பாவில் தமிழர்கள் மேற்கொள்ளும் பல காரியங்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருமைகளை நிலைநிறுத்த ஆசை கொள்வதாகவே தென்படுகிறது. இருப்பினும் நமது வாழ்வை பெருமையுடன் பார்க்கவேண்டியது நமது பணிகளில் ஒன்றுதான். ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருமைகளில் பல இன்றும்கூடப் பாவிக்க முடியாத புதுமைகளாக வெறுமனே ஏட்டளவில் மட்டுமே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றைத் தெரிவுசெய்து 2000 இற்குப் பிற்பட்ட மேன்மைகளுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்ற கோணத்தில் சிந்திக்கும்போதுதான் பழமைகூட சமூகத்தில் உயர்வான மதிப்பைப் பெறுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனினும் இவ்விதமாக எதிர்பார்க்கின்ற மாற்றங்கள் அனைத்தையும் ஒரேயடியாக நிகழ்த்திவிடல்



படிப்பகம்

padippakam



முடியாத காரியமாகும். முன்னேறிய சமூகங்களுக்கும் நமக்கும் இடையே உள்ள பலமைமல்கள் தூர இடைவெளி உடனடியான முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய தடையாகும். எனினும் அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் எட்டிப் பிடிக்கக்கூடியவாறு, சமூகத்தை சீர்குலைய விடாமல் அடிமட்டத்திலிருந்தே தயார்ப்படுத்த வேண்டியதும், தாமதப்படுத்தப்பட வேண்டிய காரியங்களல்ல.

நாம் வாழும் தற்போதய சூழல் வேறுபட்டது. வாழ்வு வேறுபட்டது, கல்வி வேறுபட்டது. எனவேதான் சிதறிக்கிடக்கும் பலம்பெயர் சமூகம் அடுத்த நூற்றாண்டுக்காக சிந்திக்கும் புள்ளியை நோக்கியாவது தனது கரங்களை இணைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்படிப்பட்ட தயார்நிலை புலம்பெயர் வாழ்வுக்கு மட்டுமல்ல, தாயகத்தின் மேம்பாட்டிற்கும் அவசியமாகும். தாயகம், புலம்பெயர் நாடுகள் ஆகிய இருதளங்களிலும் நிலைபெறக்கூடிய வல்லமை கொண்ட சந்ததியினரால்தான் இன்றைய சர்வதேச மாற்றங்களை எதிர்கொண்டு வாழமுடியும். அபிவிருத்தி, முதலீடு, தொழில் நுட்பம், சந்தைவாய்ப்பை உருவாக்குதல் போன்ற பல துறைகளில் தமிழர்களின் மொத்தச்சக்தியால் வெற்றி கொள்ளக்கூடிய எண்ணற்ற வாய்ப்புக்கள் மறைபொருளாக உள்ளன. அவற்றை உள்வாங்கக்கூடிய அகலித்த அறிவும், அதற்கான வேலைத் திட்டங்களும் அவசியம். "அடுத்த நூற்றாண்டின் புதிய விடயங்களை புரிந்து, வாசித்து, அதன்படி செயற்படுவதற்கு ஏற்றவாறு கொள்ளளவை அதிகரிக்க முடியாத கணினிகள் பாவனைப்படுத்தாது விடப்படுவது கணினி உலகுக்கு மட்டுமல்ல, அந்த உதாரணமானது மனித வாழ்வுக்கும் பொருந்தும்!" என்ற குரல் இப்போது மேலைத்தேயச் சமூகங்களிடையே ஒலிப்பதை நாம் கவனித்தல் வேண்டும். இருப்பினும் இவ்விதமான எதிர்மறைக் கேள்விகள் பல எம்முன் இருந்தாலும் நமக்குச் சாதகமான இடங்களும் பல இருப்பதை மறுப்பதற்கில்லை. உதாரணமாக இரண்டாம்



படிப்பகம்

padippakam



உலகயுத்தம் இல்லாவிட்டால் ஜப்பானையும், மேற்கு ஜேர்மனியையும் இவ்வளவு புத்தம் புதியதாகக் கட்டியமைத்திருக்க முடியமா என்பது சந்தேகமே. அதுபோலவே நாமும் இப்போது சந்தித்துவிட்ட அழிவுகளும், அவலங்களும், அகதிவாழ்வும் இன்னொரு தடவை அழுவதற்காக அல்ல; அவைகளிலிருந்து புதிதாகக் கற்றுக்கொண்டு மீண்டெழவேண்டியது தவிர்க்க முடியாதது. நமது இனம் வீழ்வதற்கல்ல எழுவதற்கே போராடியிருக்கிறது என்ற உண்மையையும், வெற்றியையும் அடுத்த நூற்றாண்டு பேசவேண்டும்; பேசாவிடில் பேசவைத்தல் வேண்டும். இந்த வழிநோக்கிக் கால்களை முன்வைப்பதே கி.பி. 2000ற்குப் பிறபட்ட வாழ்க்கையைச் சந்திப்பதற்குரிய புலம்பெயர் தமிழர்களின் பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

■

குறிப்பு : இரண்டாவது கட்டுரை கிழக்கும் மேற்கும் அனைத்துலகத் தமிழ்ப் படைப் புக்களின் தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளது.




படிப்பகம்

padippakam

உங்கள் குறிப்புக்களுக்காக :

படிப்பகம்

padippakam



ஆசிரியரின் பிற நூல்கள் :

01 சுயம்வரம் ( நாவல் )

02. ஒரு பூ ( நாவல் )

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

## நூலினுள்ளே ......

இரண்டேயிரண்டு கட்டுரைகள் மட்டுமே இச்சிறு நூலில் இடம்பெற்றுள்ளன. புலம்பெயர் வாழ்வென்பது நமக்கு மிகவும் புதியது. ஏற்கனவே நமது மூதாதையரால் வாழப்பட்டு, ஒவ்வொன்றாகக் கற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் துணைசெய்ய அச்சமின்றி நடைபயிலும் அடித்தளம் கொண்டதல்ல இவ்வாழ்வு. இங்கு தோன்றும் சிக்கல்களை ஒவ்வொருவரும் சுயமாகவே எதிர்கொண்டு தத்தமது அறிவிற்கு எட்டியபடி அவற்றிலிருந்து விரைவாகவோ அல்லது தாமதமாகவோ தம்மைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர மாற்றுவழிகள் தெரியவில்லை. இந்நிலையில் நம்மிடையேயுள்ள பல குறைபாடுகளை இனங்கண்டு முடிந்தவரை அவற்றிற்கான தீர்வுகளைத் தேட முயல்வதே இக்கட்டுரைகளின் நோக்கம்.

ஆசிரியர்.



படிப்பகம்